

ராதையும் கிருஷ்ணனும்.

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம் - 1. | சென்னை : அக்ஷய ௵ ஆவணி ௴ 1௳ | இதழ் - 5. |
| Vol. 1 | 1926-ம் ௵ ஆகஸ்டு ௴ 17௳ | No. 5 |

## ஆநந்த தரிசனம்

"மாயனிருதாள் மறவாதார் மண்ணிலென்றும் பிறவாதார்." அகில லோக நாயகனும் மாயா சொரூபியுமாகிய ஸ்ரீ கண்ணபிரானுடைய திவ்ய பாத பத்மங்களை மறவாதவர்கள் எவர்களோ, அவர்களே இப் பிரபஞ்சத்தில் மறுபடியும் பிறவாதவர்களாவார்கள். ஓ எனது அருமையான மனமே! நீ இவ்வுலகாதி போகங்களை வெறுத்துத் தேடும் அப் பரம்பொருளானது இத்தகைத்தாயிருக்குமென்று வேத வேதாந்தங்களை யுணர்ந்த பெரியோர்கள் உரைக்கின்றார்கள். அது எத்தகைத் தென்னையேல் கூறுகின்றேன் கேள்: அது இவ்வுலகமெல்லாம் அழியப் பெற்று, நீர்மயமாய்க் கிடக்கும் நாளில், அந்நீரின் நடுவில் ஒரு சிறு குழந்தையாகக் கிடக்கும் இயல்பினைப் பழமையாக வுடையது. அன்றியும் தனது நாபியில் நீர்ப்பூவான தாமரை மலரினைப் புட்பிக்கு மியல்பினையுடையது. அத்தகையது என்ன நிறமுடையதென்னில் கரியமேக நிறத்தினும் அதிகமான கருமையான நிறமானது. அன்றியும் இடைமகளிருடைய சேலைகளை அபஹரிக்கும் வழக்கத்தினையுடையது. இவைகளையெல்லாம் உடை-

யது தன்னை யடைந்தவர்களைக் கைசோரவிடா வியல்பினையுடையது. ஆதலின், இலக்ஷ்மீகாந்தனும், சத்தியத்தை நிலைநிறுத்தின தயாளுவும், தேவர்கள் வணங்குந் தேவனும், துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனும், வேதத்தைத் தந்த நாதனுமாகிய மாயனை மனமொழி மெய்களால் வந்தனை வழிபாடு செய்யவேண்டியது நம்முடைய கடன். மீன் பிடிப்போன், தூண்டிலிற் கட்டியுள்ள முள்ளின்மேல் கண்ணேக்கமாயிருந்து மீனைப் பிடிப்பதுபோல, பக்தகோடிகளுக்கு யாதொரு குறைவும் நேரிடாதபடி காக்கவேண்டுவது பகவானுடைய கடன் என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். இதனால் நாம் அவரை வணங்கும் யோக்யதை யுடையவர்களென்றும், அவர் நம்மைக் காக்கும் தயாநிதியென்றும் விளங்குவதால், ஞானிகள் தியானிக்கின்ற ஸ்ரீ ஹரியின் திருவடிக் கமலங்களைக் கண்ணனின் அவதார மாதமான இந்த ஆவணியில் நாமும் துதிக்கக் கடவோம்.

***

"இராதையும் கிருஷ்ணனும்." இராதை பரமபக்தை. அவளுடைய பக்திக்கு ஈடுபட்ட ஸ்ரீகிருஷ்ணன் ஒரு ஸமயம் கோபிகைகளின் வேண்டுகோளுக்கிரங்கி துவாரகையைவிட்டு கோகுலத்துக்கு வந்தார். அப்போது கிரீடம், கேயூரம், ஹாரம் முதலியன அணிந்து அரசனைப்போல் விளங்கினர். இராதை அவரைக் கண்டவுடன் கண்ணை மூடிக்கொண்டாளாம். கிருஷ்ணன் திகைத்து நிற்கவே, இராதை அவரை நோக்கி "இது யார் என் முன்னே நிற்கிறது? இந்த வேஷம் எனக்கு வேண்டாம். புள்ளாங்குழலை யூதும் 'என்' கிருஷ்ணனிடம் எனக்குப் பிரீதியேயன்றி கிரீடம், கேயூரம், ஹாரம் முதலியவற்றில் அனக்கு அபேக்ஷையில்லை. முன் நான் நேசித்த கிருஷ்ணன் எந்த நிலைமையிலிருந்தாரோ அதே நிலைமைதான் எனக்குத் தியானப் பொருள்" என்றாள். உடனே கண்ணன் வெட்கமடைந்து முன்னிருந்த கோபால வேஷத்தைப் பூண்டு எதிரில் நின்றார். தக்ஷணமே இராதை அவரை அடிபணிந்து தலை வணங்கி நின்றாள். இதைப்போல் இக்காலத்தும் விவேகத்திற் சிறந்த மாதர்கள் தங்களின் கணவர்களிடம் மனதைஸமர்ப்பிப்பரே யன்றி ஆபரணத்தில் சிந்தை செலுத்தார். பொருளில் மனம் சென்றால், அப்பொருள் இருளாகி உண்மையான பக்தியை மறைத்து விடும். பகவானுடைய பாதம் இருக்குமிடம் தெரியாமல் ஜீவன் தேடி யலைந்து அற்ப வின்பங்களாகிய கருங்கற்களில் முட்டிக்கொள்ளுமன்றோ?

***

"அனுபவித்தவர்களுக்கன்றி ஆநந்தம் தெரியாது." ஒரு தட்டு நிறையத் தங்கமும், ஒரு தட்டு நிறையக் குழந்தையும் வைத்தால் பெற்றவன் பொன்னை விரும்பாது புத்திரனையே அபேக்ஷிப்பான். இம்மாதிரியே உண்மையான பக்தர்கள் பகவானைப் பெரிதாயெண்ணி அவரிடத்தில் கொள்ளும் பக்தியின் பெருக்கைப் போற்றி

மதிப்பரே யன்றி, அவரை "ஸ்வாமி! ஆஸ்தியைக் கொடு, கீர்த்தியைக் கொடு" என்று வேண்டிக்கொள்ளார். ஒரு ஆழ்வார் கூறுகிறார்:—"நாராயணா எனக்கு முக்தி வேண்டாம்; எத்தனை ஜன்மங்கள் வந்தாலும் வரட்டும்; புழுவாய்ப் பிறந்து நரகத்தில் வஸிக்க ஆக்ஞை யிட்டாலும் அவ்விதமே வஸிக்கிறேன்; உம்முடைய பாத பத்மங்களின் ஸ்மரணம் மாத்திரம் எனக்கு எப்போது மிருந்தாற் போதும். அந்தப் பக்தியாகிய தேனை நான் அருந்திக்கொண்டிருந்தாற் போதுமானது. அந்தக் கிருபையைத் தாங்கள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்திப்பாராம். ஆகா! பாருங்கள். இந்த ஆழ்வாருக்கன்றோ பக்தியின் ருசி தெரியும்? மற்றவர்கட்கு என்ன தெரியும்? அனுபவித்தோர்தான் ஆநந்தத்தினை யுணரவல்லார்.

***

"ஆசைக்கோர் அளவில்லை, அகிலமெல்லாம் கட்டியாளினும் கடல்மீதிலே" என்றவாறாக, மனிதன் எப்போதும் அது வேண்டும், இது வேண்டும் என்று சொல்லிக்கொண்டே யிருக்கிறான். அவனுக்குக் குறைவுகளில்லாத நாளில்லை. ஒவ்வொரு குறைவையும் நீக்கக் கருதி அவன் வெளிப்படவேண்டி யிருக்கிறது. உதாரணமாக, வண்டி யில்லையே என்ற மனக்குறை யுண்டானால் அதை ஸம்பாதிப்பதற்காக வெளியே செல்லவேண்டுமன்றோ? உள்ளே இருக்கும் மனிதனைத் தெருவிலிழுப்பது என்ன? "வேண்டும்" என்ற ஆசையல்லவா? மனிதன் எப்போதுமே ஆசையுள்ளவன். ஒவ்வொரு ஆசை தோன்றும்போதெல்லாம் மேற்கண்டபடி அவன் வெளியே செல்ல நேருகின்றது. ஸ்வயமாயுண்டாகும் ஒவ்வொரு ஆசையும் ஐம்புலன்களின் வழியாய்ச் செல்வதால் ஜீவனும் அவ்வழியே இழுக்கப்படுகின்றது. புத்திமான்கள் ஆசைகளின் தன்மையை யறிந்து அவைகட்கு இடம் கொடாமல் வைராக்கிய சித்தர்களா யிருப்பர். தோன்றிய ஆசையைச் செலவிட்டுவிடாமல் உள்ளடக்கினால் மகத்தான சுகத்தைப் பெறலாம்.

***

"மனம்போல வாழ்வு" என்றபடி ஸுகத்தை விரும்புவதும், கஷ்டத்தை வெறுப்பதும் மனஸின் தன்மை. மனுஷ்யனுடைய ஜீவகாலமெல்லாம் வெறுக்கும் விஷயங்களைத் தள்ளுவதிலும், விரும்பும் விஷயங்களை மறப்பதிலும் செலவழியவேண்டும். தனது உண்மையான தன்மையை மறைக்கும் ஒருவித வலை மனிதனுடைய மனதை மூடிக்கொண் டிருக்கிறது. இந்தப் போர்வையை எடுத்தெறிய யோக்யதையுள்ள வஸ்து மதம் ஒன்றுதான். நீதியைவிட மதம் உயர்ந்தது. ஜன உபயோகத்துக்காக நீதி சாஸ்திரங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவற்றின்படி அனுஷ்டிப்பது தகுந்த நேசனுடைய சொற் கேட்பது போலாம்.

***

"மதம் கெட்டால் பதம் கெடும்" என்பது பழமொழி. மதமானது ஒருவனிடமிருந்து ஸகல துன்பங்களையும் நீக்குகிறது. இவ்வுலகத்தில் மரணத்தையும் துக்கத்தையும் அஞ்ஞானத்தையும் வெறுக்காதவர்கள் யாருமிலர். தன்னுடையதல்லாத ஒவ்வொரு பொருளிலும் அதிருப்தி யுண்டாகிறது. தன் குழந்தையிடம் இருக்கும் ஆவல்போல் பிறரது குழந்தைகளிடம் இருப்பதில்லை. இவ்விதமே தனக்குச் சொந்தமுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் திருப்தியுண்டாகிறது. இதுதான் சுக துக்கங்களுக்கு ஜன்மஸ்தானம். நேசம் விருத்தி யடைந்ததும் பாசம் தோன்றுகிறது. இந்தப் பாசம் பகவானை மறக்கவைத்து விடுகிறது. கடைசியில் பெரும் பள்ளத்திலும் தள்ளிவிடுகிறது.

***

"சாகாதவீட்டுச் சாம்பல் ஒருபிடி" எங்கேனும் கிடைக்குமா? இறப்பும் பிறப்பும் என்றும் உள்ளது. தோற்றமுள்ளவைகளுக்கெல்லாம் ஜனனமரண துக்கமுண்டு. ஆகவே ஜீவன் கடைத்தேறுவதற்கு மதம் அவசியமாகிறது. மதம் ஒன்றுதான் ஆதியந்தமில்லாதது. இகலோக வாழ்க்கையில் துன்புறும் ஜீவனைப் பகவானின் பாத நீழலில் சேர்க்கவல்லது. துக்கத்தையே அனுபவியாமல் எப்பொழுதும் சுகத்தையே அநுபவிக்க நினைத்து உழைக்கும் மனிதனுடைய கருத்து ஒருநாளும் நிறைவேறுது. இந்த ஜகத்தில் துக்கங்கள் எதேஷ்டமா யிருக்கின்றன. ஒவ்வொரு சுகத்துக்கு முன்னும் துக்கம், பின்னும் துக்கம். இவ்வுலகத்தில் சுகமென்று நினைக்கிற ஒவ்வொரு நிலைமையும் போர்வையால் மூடிய துன்பங்களேயாம். துன்பங்களே நமக்கு நேர் விரோதிகள். ஆகவே, சுகதுக்கம் இரண்டும் மனிதர்களுக்கு விரோதிகள் என்பதில் தடையில்லை. துக்கத்தை உடனே விரோதியென்றறியலாம். சுகத்தையோ தீர்க்காலோசனையின் மேல்தான் விரோதியென்று நிச்சயிக்கலாம். அநேக மகரிஷிகள் உலக ஸுகங்களைத் தள்ளவேண்டுமென்ற அபிப்பிராய முடையவர்கள். பகவான் உன்னின்றும் வேருக இல்லை. அதாவது, அவர் உன்னிடமே இருக்கிறார். அவரைக் கண்டுகொள்ளும் பரிபக்குவத்தை நீ இன்னும் பெறவில்லை. அவ்விதமான பக்குவத் தன்மையைப் பெறுவதற்கு மதம் அவசியம். மதமானது ஆத்மாவின் தன்மையை யறிந்து பரிபக்குவம் பெறும் சக்திக்குக் காரணமாக இருப்பதால், அது மனிதருக்கு முக்கியமாய் வேண்டிய எல்லாவற்றிலும் பிரதானமா யிருக்கிறது.

***

"வாயே நீ வாழ்த்து" என்று பெரியோர் கட்டளையிட்டிருக்கிறார்கள். மணிவண்ணனுகிய கண்ணனை ஸ்தோத்திரம் செய்ய வேண்டியது வாயின் கடமை. அப்படிச் செய்யாமல் நல்லோர்களை நிந்திப்பதும், பிறர் மனம் புண்படும்படி வன்சொற்களை வழங்குவதும்

தியவாய்க்குரிய துர்க்குணங்கள். இவ்வசுத்தவாயர்கள் செய்யும் ஸ்தோத்திரம் பகவானுக்குப் பிரீதிகரமாகுமா? ஒவ்வொரு புஷ்பத்திலு மிருக்கும் சாரமானது கசப்பா யிருக்கும். இதைத் தேனீக்களெடுத்துத் தித்திப்புள்ள தேனாக மாற்றிவிடுகின்றன. இவ்விதத் தன்மை தேனீக்களுக்குண்டு. இவ்விதமே சாதிக்க வொண்ணாதவற்றையும் அதி சுலபமாய்ச் செய்யும் சக்தி உண்மையான பக்தர்களுக்கு உண்டாய்விடுகிறது.

***

"சுக துக்கம்" ஆகிய இரண்டையும் ஸமமாய்ப் பாவித்து அவைகட்கு ஈடுபடாமலிருப்போர் ஸதா ஆநந்த முகத்தோடும் ஜ்வலிப்பர். அவர்கட்கு ஸமாதானமான உத்தம சாந்த நிலைமை உண்டாகிவிடுகிறது? சாந்தமென்னும் தைலத்திலிருந்து ஸந்தோஷமாகிய ஸுவாஸனை வீசுகிறது. சித்த சுத்தியென்னும் வைர மணியிலிருந்து முககாந்தி உண்டாகிறது. இத்தகையோரே ஆநந்திதர்களாவர்.

***

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்" என்பது போல், கோபிகா ரமணிகள் தங்களைச் சுற்றிலுமுள்ள யாவற்றையும் மறந்து தங்களையே பகவானுக்கு அர்ப்பணம்செய்து காட்டிய அன்பு மகத்தானதும் ஒப்பற்றதுமாகும். கோபிகைகளான பக்தைகளுக்குப் பேதபுத்தி யொழிந்து எல்லாவற்றையும் பிரம்ம ஸ்வரூபமாய்ப் பார்க்கும் திவ்ய ஞானத்தை யுண்டாக்கவேண்டியும், ஞானமே எல்லாவற்றிலும் உயர்ந்ததென்று குறிக்குமாறும் கிருஷ்ணனை ஞானஸ்வரூபி அவர்களின் சேலைகளோடு உயர்வான புன்னை மரத்தில் ஏறிக்கொண்டார். கோபிகைகளின் சேலையை அபகரித்து ஒளித்தாரேயன்றி அவர்களுடைய ஆபரணங்களை எடுக்கவில்லை. சேலை எவ்வாறு சரீரத்தை மறைத்துக்கொண் டிருக்கிறதோ, அவ்வாறே அவித்தையானது ஞானத்தை மறைத்துக்கொண்டிருக்கிறது. ஆதலின் பாகவதத்தில் சொல்லியிருக்கும் இவ்விஷயம் தத்துவத்தைப் போதிக்க வென்பதை யோராமல், ரகஸ்யார்த்தத்தை யறியாமல் பாமாத்வாகிய ஸ்ரீ கிருஷ்ணனை மனிதனாக நினைத்து அவர் மீது தோஷாரோபணம் செய்வது மதியீனமன்றோ?

***

"வாயுள் வையகங் கண்ட மடநல்லார்" என்கிறபடியே, எசோதைக்குத் தனது வாயைத் திறந்து அதில் ஸகல அண்ட சராசரங்களும் இருக்கின்றன வென்று காட்டியது தம்மைக் கேவலம் மனுஷ்யனென்று அவள் நினைக்காமல் பகவானென்று அறிந்து பிரார்த்திக்கட்டுமென்னும் பரம கருணையால் செய்த லீலையாகும். பாரத யுத்தத்தில் பல சத்துருக்களுக் கெதிரில் யுத்தாங்கத்தில் அர்ச்சுனனுக்குக் காமத்தின் மகிமையையும், பக்தியின் பெருமையை

யும், யோகத்தின் அருமையையும், ஞானத்தின் மேன்மையையும் (பகவத்கீதையிற்) கூறிய கிருஷ்ணன் வெண்ணெயைத் திருட வேண்டுமென்ற நினைவுடன் திருடியிருப்பாரா? வியபிசாரம் செய்திருப்பாரா? கம்ஸனுகிய பாபத்தை யொழித்து, புண்ணியஸ்வரூபிகளாகிய கோபிகா ரத்நங்களை நேசித்த கண்ணன், அவர்களுடன் ஸாமான்ய மனிதன்போல் ரமித்தாரென்று குறை கூறுவது உண்மையை யறியாதவர்கள் உரைக்கும் வார்த்தையாகும்.

***

"அன்பைப் பெருக்கி என்னுருயிரைக் காக்கவந்த இன்பப் பெருக்கே இறையே" என்றார் பெரியோர். காவேரி, கிருஷ்ணு முதலிய ஆறுகள் பல கிளைகளாகப் பிரிந்து அநேக விடங்களிலுள்ள பயிர்களுக்குப் பாய்வதுபோல், ஸர்வ சக்தியுள்ள பகவான் பிராணிகளிடமுள்ள கருணையால் ராம—கிருஷ்ணுவதாரங்களை யெடுத்து மனிதர்க்கு அவசியமான நல்வழியைக் கற்பித்தார். ராம—கிருஷ்ணமூர்த்திகளின் சரித்திரங்களை வாசிப்பதாலும், கேட்பதாலும் நற்கருமம் இன்னதென்றும், அதைச் செய்யவேண்டிய அவசியமும் தெரியும். இராவணன் துஷ்கிருத்யம் செய்ததால் ராமருடைய பாணத்துக் கிரையானுன். சாகுமுன்னே பலவானுன தன் மைந்தன், தம்பி முதலியோரை ரணக்களத்தில் பறிகொடுத்து மகத்தான வியஸனத்தை யடைந்தான். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியால் கம்ஸன் என்னும் மகாபாபி அதமானுன். ராமாவதாரத்தில் மகரிஷிகளின் துக்கத்தை நிவர்த்திசெய்து, கிருஷ்ணுவதாரத்தில் அம்மகரிஷிகளின் அம்ஸமான கோபிகைகளின் சுகத்தை விர்த்திசெய்தார். அவருடைய கருணை வியக்கத்தக்கதன்றே? பகவான் கடைசியாக அர்ச்சுனனுக்குப் பின்வருமாறு உபதேசிக்கின்றார்:—

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம்ஸரணம்வ்ரஜ,
அஹந்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாஸுச:

**எல்லாத் தருமங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணமாக அடைவாயாக; நான் உன்னை ஸமஸ்த பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்; துக்கிக்க வேண்டாம்.**

என்கிறார். ஆகவே எல்லாவற்றையும் கமலக் கண்ணனுக்கே அர்ப்பணம் செய்து ஸதா அவரைத் தியானித்துய்யக்கடவோம்.

# ஆநந்த குண போதினி

அக்ஷய௵ ஆவணி௴ 1௳


## வருங்காலத்திய இந்திய ஜன ஸமூகமும் நமது கடமையும்.

வருங்காலத்திய இந்திய ஜன ஸமூகம் எதுவாயிருக்குமென்பதை ஒவ்வொரு இந்தியரும் ஆராய்ந்தறியவேண்டும். தேசப் பொது விஷயத்தைப் பொறுத்தமட்டில் எந்த ஜாதியாரேனும், எக்குலத்தாரேனும், எம்மதத்தினரேனும் ஐக்கியமாய் ஒத்து வாழ்வது சாத்தியமாகக்கூடியதுதான். உலகத்து மற்ற தேசங்களின் சரித்திரங்களைப் பார்த்தாலும் இந்த ஒற்றுமை கைகூடிவரத்தக்கதே. இந்தியாவில் நிலையாய்க் குடியிருந்து வரும் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள்—இவ்வைந்து ஜன ஸமூகத்தாரும் இந்தியரே யாவர். இனி, நமது தேசத்தில் வாழ்பவர் யாவருக்கும் தாங்கள் ஒரே ஜன ஸமூகத்தார் என்கிற உணர்ச்சி உண்டாகவேண்டும். ஹிந்து மதத்தில் எத்தனையோ பிரிவுகள் இருக்கின்றன. இஸ்லாமிய மதத்திலும், கிறிஸ்துவ மதத்திலும், பௌத்த மதத்திலும், பார்ஸிகளுடைய மதத்திலும் அப்படியே அநந்தம் பிரிவுகளுள்ளன. தங்கடங்கள் மதத்தில் எத்தனை மதாசாரப் பிரிவுகள் இருந்தபோதிலும், விரோதங்கள் பாராட்டினபோதிலும் குறித்த ஒரு சமயத்தில் பொதுவான நியாயத்தை முன்னிட்டு ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், பார்ஸிகள் முதலியோர் தாங்கள் ஒரே மதத்தினராகையால் தங்கட்குள்ளிருக்கும் மதசாரப் பிரிவினைகளைப் பாராட்டாது ஒருமனப்பட்டுச் சேர்ந்துகொண்டு நடக்கவில்லையா? அதுபோலவே, தேசப் பொது க்ஷேமத்தைக் கருதி இவ்வைந்து ஜன ஸமூகத்தாரும் தங்களை ஒரே இந்திய ஜன ஸமூகத்தாராக மதித்து தங்களின் மதப் பிரிவினைகளை மறந்து நடக்கவேண்டும். அவரவர்கள் தங்கடங்கள் மதத்தை யனுஷ்டித்து வருவதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆயினும், தேசப் பொது விஷயமாய் இவ்வைந்து வகுப்பாரும் ஒன்று சேர்ந்து இந்தியர்கள்—பாரத சந்தானங்கள்—எனத் தங்களை அழைத்துக்கொள்ளவேண்டும். அதற்கேற்றபடி அவ்வுணர்ச்சியிலும் வழக்கப்படவேண்டும். ஒவ்வொருவனும் தான் முதலில் தேசமாதாவின் புதல்வன்—இந்தியன் என்றும், பிறகு ஹிந்து, மகம்மதிய, கிறிஸ்தவ, பௌத்த, பார்ஸியனென்றும் எண்ணவேண்டும். ஜாதியாலும் மதத்தாலும் உண்டாகும் வேறுபாடுகளைத் தங்கள் வீட்டுக்குள்ளும் பந்துக்களிடத்திலும் பாராட்டவேண்டும். தேச பந்தத்துவத்தைக் கொண்டாடும்போது

சொந்த மத சிந்தனைகளை அதிற் புகுத்தாமல், எவ்வித வித்தியாஸங்களையும் பாராட்டாதவர்களாகி, யாவரும் ஒரு தேசத்து ஸஹோதரர்கள் என்கிற நல்லெண்ணம் அனைவர் மனதிலும் குடிகொள்ள வேண்டும். போஜன விஷயத்தில் ஒருவன் மாமிச பக்ஷணியாயும், ஒருவன் கந்தமூல பதார்த்தங்களைப் புசிப்பவனாயும் இருக்கக்கூடும். ஒருவன் தலைக்குட்டை அணியக்கூடும். ஒருவன் தொப்பி போடக்கூடும். ஆகாரத்தினாலும் உடையாதிகளினாலும் வித்தியாஸப்படுவது அவரவர்கள் சௌகரியத்தைப் பொருத்ததாக விருக்கிறது. அப்படியே மத விஷயத்திலும் அவரவர்களுடைய ஞானத்திற்குத் தக்கபடியும், பரம்பரையாய்த் தொடர்ந்து வரும் பூர்வ ஸம்பிரதாயங்களுக்குத் தக்கபடியும் பேதித்திருக்கக்கூடும். இந்தப் பேதங்களைத் தேச பந்தத்துவத்தில் ஒருபோதும் கலக்கக்கூடாது. தேச பந்தத்துவத்தை மகா பரிசுத்தமுள்ளதாக்கித் தனியே அதை வளரவிடவேண்டும். எல்லோரும் இந்தியா என்னும் ஒரு தேசத்தில், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாகிய ஒரே துரைத்தனத்தில் வசித்து வருகிறபடியால், அனைவரும் ஒரே ஆளுகையின் குடிகளாயிருப்பதனால், தேச க்ஷேமத்தில் யாவருடைய சுகதுக்கங்களும் ஒரே தன்மையனவாகவே இருக்கிறதாகையால், இந்த ஒரு விஷயமே நம்மை ஒரு ஜனக் கட்டுப்பாடுள்ளவர்களாக்கக் கூடியதாதலின், அந்தக் கட்டுப்பாட்டை நாம் பலப்படுத்துவதற்காக நமது அபிப்பிராய பேதங்களை யெல்லாம் விட்டுக் கொடுத்தும், பாராட்டாதொழிந்தும்—இவ்வாறான தியாகங்களைச் செய்து மேற் சொல்லிய ஐந்து ஜனப்பிரிவாரும் ஏகோபித்துத் தங்களை ஒரே இந்திய ஜன ஸமூகத்தார் என்று அழைக்கும்படியாக ஒரு புதிய உருவுடனும், ஒரு புதிய ஜோதியுடனும் ஒரே ஜனமாக, உலகத்தவரின் முன்பு தோன்றுதல்வேண்டும். இவ்விதம் பரிணமித்து ஒன்றாய்த் திரண்டு அமைவதனையே இராஜ்ய சாஸ்திர வல்லுநர் ‘ஜன நிர்மாணம்’ (National Building) என்று அழைப்பர்.

ஜனநிர்மாணம் என்பது ஒரு நாட்டின் பல்வேறு வகைப்பட்ட குடிகள் தங்களின் முன்னேற்றத்தையும் தேச க்ஷேமத்தையும் நாடி, தங்களுக்குள் நெடுங்காலமாய் இருந்து வரும் அபிப்பிராய பேதங்கள் யாவற்றையும் ஒழித்து, தங்களை ஒரே ஜாதியாராக, ஒரே ஜன ஸமூகத்தவராகக் கருதி, தங்களது உருவ வேறுபாட்டினை யெல்லாம் ஒன்றனுள் அடக்கி ஒரே உருவமாகத் திரளுதலாம். அதாவது, செவி, கண், வாய், மூக்கு, வயிறு, கால் என்னும் இவ்வளவு பேதங்களும் ஒன்றனுள் மறைந்து தேகம் என்னும் ஒரே பொருள் கொண்டு ஓருருவாகிவிடுதலாம். நானாவித மூலிகைகளும், கடைச்சரக்குகளும், நெய், சர்க்கரை, தேன் யாவும் ஒன்று கூடி பேதம் ஒழிந்து ஒரே லேகியமாக ஆகிவிடுதல்போலவுமாம். இவ்வாறு திரண்டு அமையும் ஓர் உருவுக்குள்ள சக்தியை யாரே

அளவிடற்பாலார்? ஒரு யானையை வெல்லலாம்; ஒரு யானைக் கூட்டத்தை வெல்லுதல் கூடுமோ? இவற்றால் ஜன நிர்மாணத்துவத்தின் சக்தி தத்துவம் எத்துணை மகத்துவ மிக்கதென்பதை யுணர்க. ஆங்கிலேயர், பிரான்சியர், ருஷியர், அமெரிக்கர், ஜெர்மனியர், இட்டாலியினர், பெல்ஜியத்தினர், துருக்கியர், ஜப்பானியர்—இன்னோரனைவரும் தங்கள் தங்களுக்குள் ஒரே ஜனமாகத் திரண்டு, ஒரே ஜன நிர்மாணமாக அமைந்து, பிரஜாசக்தியின் மகாத்மியத்தை உலகத்துக்கு அறிவித்து வெற்றிக் கொடியை நாட்டியவர்களாவர்.

இவ்வாறான ஏகோபவித்த ஜன நிர்மாண ஸ்தாபிதத்திற்கு தேசத்தார் அனைவரும் ஒருமனப்பட்டு உழைக்கிற ஒரு பெரிய முயற்சியின் ஒப்பற்ற தியாகத்திற்கே 'ஸமூக ஊழியம்' என்று சொல்லப்படுவது. ஸமூக ஊழியம் இருவகைப்படும். ஒன்று, தங்களின் சொந்த மதத்திற்காகச் செய்யப்படும் கைங்கரியம். மற்றொன்று தங்களின் ஜன்ம பூமிக்காகப் புரியும் தேச சேவை. மதம் என்பது பரலோக சாதனத்திற்காக நம்மைப் பக்குவப்படுத்துவதற்கென்று ஏற்பட்ட புண்ணிய ஸ்தாபனம். ஸ்வதேசம் என்பது நாம் ஜீவன் முக்தி பெறுமளவும் நமக்கென்று ஏற்பட்டுள்ள ஜீவிய காலத்தைச் சுககரமாகச் செலவிட்டுக்கொண்டு தங்குவதற்கான சொந்த ஸ்தலமாகும். எனவே, இவ்வுலக வாழ்வுக்குத் தேசமும், அவ்வுலக வாழ்வுக்கு மதமும் பிராதான்யமாகின்றது. இவ்விரண்டிலும் நாம் பூரண இன்பம் பெறுதற்பொருட்டுப் பிரயாசைப்படும் ஒரு தனி முயற்சிக்கே ஸமூக ஊழியம் என்று பெயர். ஸமூக ஊழியம் என்பது சுய நலத்தைக் கருதாத, பொது நலவிருப்பமே நாடிய, ஒப்பற்ற ஒரு தியாகத்திற்கு—உழைப்பிற்கு—முயற்சிக்குச்—சொல்லப்படுவதாகும்.

இவ்வித ஸமூக ஊழியத்தில் தேச சேவையை முதன்மையதாகவும், அதற்குப் பின்னர் மத கைங்கரியத்தை இரண்டாவதாகவும் கொள்ளவேண்டும். ஏனெனில், தேசம் இருந்தால் தான் மதம் நிலைக்கும். தேகம் சுக ஸ்திதியில் இருந்தால்தான் உயிர் நிலைக்கும். தேகத்தைத் தேசமாகவும், மதத்தை உயிராகவும் பாவித்திடுக. மதத்தைப் பாலுக்கு ஸமமாகவும், தேசத்தை அந்தப் பாலை ஊற்றி வைக்கும் பாத்திரமாகவும் கொள்ளலாம். பாத்திரம் இல்லாவிட்டால் பால் எங்கே இருக்க முடியும்? எனவே, தேச சேவை பிரதமம்; அதற்கு அடுத்த படியில் மதமாம். முதலில் நமக்கு நாம் தங்கி நிற்கும் இவ்வுலகமானது தேவைப்படுகிறது. இவ்வுலகில் நமது கால்களை யூன்றி அமர்ந்த பின்பு நமது வாழ்க்கையானது செம்மையுறவும், நாம் எடுத்த பிறவி கடைத்தேறவும் நமது சொந்த மதத்தில் பக்தி கொண்டு பணியவேண்டியவர்களாகிறோம். எனவே,

முதலில் தேசமும், அதற்கு அடுத்ததாக மதமும் நமது சிந்தனைக்குரியவையாகின்றன.

இதில் மதத்தின் சார்பாய் ஒரு விஷயம் நமது மனத்தில் ஆழப் பதிய வேண்டும். அதாவது, ரவீந்திரநாத் தாகூர் சொல்வதுபோல், **மதம் வேறு, குருக்களின் கட்டுப்பாடு வேறு**—என்பதை நாம் மறக்கலாகாது. மதமும் குருக்களின் கட்டுப்பாடும் ஒன்றுக்கொன்று தீயும் சாம்பரும் போல ஒற்றுமைப்பட்டு நிற்பதாம். அதாவது, மதத்தை நெருப்புக்குச் சமமாகவும், மதக் கட்டுப்பாட்டை அந்த நெருப்பின் மேல் படியும் சாம்பலுக்கு சமமாகவும் சொல்லலாம். பல சமயங்களில் இந்தச் சாம்பலை நாம் ஊதி சிறிது விலக்கி விடுவதுமுண்டு. அதனால் நெருப்பின் உஷ்ணம் அதிகப்படுமே யன்றி அது அவிந்து போவதில்லை. அதே மாதிரியாக அவசியமான சந்தர்ப்பங்களில் குருக்களின் கட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்தி விடுவதில், மதத்தின் பிராதான்யத்துக்கு எவ்வித தோஷமும் நேராவாம். சாம்பலைச் சிறிது ஊதி விடுவதனால் நெருப்பின் காந்திக்கு ஏதேனும் பங்கமுண்டோ? பிராதான்யமாகிய தேச மகா ஊழியத்திற்கு எதிரிடையாக மதத்தைச் சம்பந்தித்த குருக்களின் கட்டுப்பாடு நேர்படுமாகில், அந்தக் கட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்தி ஒதுக்கி தேச மகா ஊழியத்திற்கு வழி விட்டுக் கொடுப்பதில் மதத்தின் கௌரவத்திற்கு ஒருபோதும் பின்னம் உண்டாக மாட்டாது. நாம் குருக்களின் கட்டுப்பாட்டை நெருப்பின்மேலுள்ள சாம்பலை ஊதி விடுவதுபோல சிறிது தளர்த்துகிறோமே யன்றி, நெருப்பாகிய மதத்திற்கு எவ்வித இடரும் செய்யவில்லை யென்பதையும் நமது மனத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

மேற்கூறியவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியதென்னவெனில், தேச மகா ஊழியத்தை மதக் குருக்களின் கட்டுப்பாடானது கெடுத்துச் சிதைக்கும் போல் தோன்றுகிற சமயங்களில் அந்தக் கட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்தியும், விட்டுக்கொடுத்தும் தேச ஊழியத்திற்குப் பின்னமில்லாமல் நடத்திச் செல்லவேண்டும். அதாவது, மதமும் மதத்தின் கட்டுப்பாடுகளும் தேச ஊழியத்தைத் தடையின்றிச் செய்வதற்குச் சாதகமாய் இருந்து உதவும்படியாக அமைந்துவிட வேண்டும். இதனால் மதத்தினுடைய மேன்பாட்டிற்கு எவ்வித சிறுமையுமில்லை; சிறுமைக்குப் பதிலாக அதன் பிரகாசம் தேச ஊழியத்தினால் இன்னும் அதிகப்பட்டு ஜெகஜ்ஜோதியாய் விளங்கும். தேச ஊழியத்திற்கு மதத்தின் எந்தெந்தக் கட்டுப்பாடுகள் தடையாயிருக்கின்றன வென்பதைத் துருக்கி தேசமானது ஆராய்ந்து அலசிப் பார்த்து, அக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, தேச ஊழியத்தில் உயிரின் வேகம் நிரம்பி, அது ஆற்றின் பிரவாகம் போல் தங்கு தடையின்றிச் செல்லுமாறு செய்து திருத்திக்கொண்டு விட்டதையும் இங்கு கூர்ந்து கவனிக்கவேண்டும். துருக்கியில்

முன்பு, மதத்தின்கீழ் தேசம் இருந்தது. இப்போது தேசத்தின்கீழ் மதம் இருக்கும்படி செய்யப்பட்டு போனது. இதனால் இஸ்லாமியத்துக்கு ஏதாவது தாழ்வுண்டோ? இல்லை. மதாபிமானத்தால் தேசாபிமானத்தின் லக்ஷியத்திற்குக் கெடுதல்கள் நேரினும் நேரலாம். தீக்குச்சி போன்ற தன்மையுடையவர்களான கலகப் பிரியர்கள் தங்களின் சொந்தப் பிரயோஜனத்தை நாடி, மதத்திற்கு ஏதோ அபாயம் வந்து விட்டதென்று பொய் வதந்திகளைப் பரப்பினால், உடனே பாமர ஜனங்கள் தேசாபிமான லக்ஷியத்தை ஒரு புறம் உதறி விட்டு, மத வெறியில் மூழ்கி விஷமம் செய்யக் கிளம்பி விடுகிறார்கள். இதனால் தேசீய வாழ்வை இந்த மதாவேச உணர்ச்சி பாழ்படுத்தி விடுகிறது. இதற்கு இப்போது நடக்கும் ஹிந்து முஸ்லிம் பிணக்குகளே போதிய ஸாக்ஷியமாகும். ஆனால், தேசாபிமானத்தால் மதாபிமானம் ஒரு நாளும் கெடாதென்பதையும் கவனிக்கவேண்டும். மதத்தைச் சேர்ந்துள்ள குருக்களின் கட்டுப்பாட்டில் மட்டும் இன்றியமையாத மாறுதல்கள் சில புகக்கூடும்; அவ்வளவே. எப்போதுமே பகவத் தியானத்துடன் சம்பந்தப்படுத்தப்படாத கிரியை எதுவொன்றும் இவ்வுலகில் இல்லாதது போல், தேசாபிமானத்துள்ளும் "கடவுள்" என்ற எம்மதத்துக்கும் சம்மதமான பொது நாமத்துடனும், பொதுவான திருஷ்டியுள்ளதாய் மதத்தின் லக்ஷியமானது ஜ்வலித்துக்கொண்டு நிற்கும்.

இவ்வாறாக, **தேசம்—மதம்** என்ற இரண்டின் தன்மைகளையும் தெளிவாக உணர்ந்து, மதத்தைத் தேசமும், தேசத்தை மதமும் காக்கும்படியான வழியில் ஐக்கிய சிந்தையோடும் தேச மக்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து ஸமூக ஊழியம் இயற்ற முற்படுவாராயின், அதி சீக்கிர காலத்தில் தானே **"இந்திய ஜன நிர்மாணம்"** தோன்றுதல் சுலப சாத்தியமாகி விடலாம். அவ்வித ஜன நிர்மாணத்தின் கீழ் இந்தியாவின் வருங்காலத்திய ஜன ஸமூகம் எவ்வாறு அமையவேண்டி யிருக்குமென்பதைப் பற்றி மேலே விவரித்திருக்கிறோம். அதாவது, தேச பந்தத்துவத்தைக் கொண்டாடும் பொழுது எந்த உட்பேதங்களையும் பாராட்டாதொழிந்து, அனைவரும் **இந்தியத்தாயின் மக்கள்—இந்தியர்** என்ற சிந்தனையே மேலாடப் பெற்றவர்களாய் விடுவர். **இவ்விதமான அறிவின் மிகுதிக் கேற்றபடி** தேசத்தின் லக்ஷியமும் மகா உன்னதத்திற்குக் கொண்டு போகப்படும். அதன் பலாபலன் கடைசியில் ஸ்வராஜ்ய சித்தியில் வந்து முடியும். இதற்கு ஏற்றவாறு, மேற்கண்ட விதமாக, நாம் நமது ஸமூக ஊழியத்தினை—நமது கடமையை-செய்யக்கடவோம்.

---

# மதமும்—கட்டுப்பாடும்

(மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் வாக்கு.)

**1**

ஒருவன் மற்றொருவனைக் கஷ்டப்படுத்தினால், இருவருக்கும் கெடுதியென்று 'மதம்' சொல்லுகிறது.

மகள் விதவையாகிப் பட்டினி கிடந்து தவிக்கும்போது, இன்ன திதியில் அவளுக்குத் தாகத்துக்கு ஜலம் கொடுத்தால் பெற்றோர்களுக்குப் பாவம் என்று 'குருக்களின் கட்டுப்பாடு' சொல்லுகிறது.

**2**

பச்சாத்தாபத்தாலும், ஸத்கர்மத்தாலும், ஒருவன் பாவத்தைக் கழுவலாமென்று 'மதம்' சொல்லுகிறது.

கிரகணத்தன்று ஒருவன் இன்ன நீரில் முழுகினால் தன் பாவம் தீர்வதுடன், பதினான்கு தலைமுறை பிதுர்க்கள்செய்த பாவமும் தீருமென்று 'கட்டுப்பாடு' சொல்லுகிறது.

**3**

மலைகளையும் கடல்களையும் கடந்துபோய் இவ்வழகிய உலகத்தின் வியப்புகளைக் கண்டு களிக்கவேண்டுமென்று 'மதம்' சொல்லுகிறது.

கடலைக் கடந்தவன் மண்ணில் புரண்டு பிராயச்சித்தம் பண்ணவேண்டுமென்று 'கட்டுப்பாடு' சொல்லுகிறது.

**4**

எக்குடி பிறந்தாலும் உண்மையுடையவன் தொழத் தக்கவனென்று 'மதம்' சொல்லுகிறது.

பிராமணனாகப் பிறந்த ஒருவன் மஹா அயோக்யனாக இருந்தபோதிலும் அவன் பாததூளைப் பிறர் சிரசில் தரிக்கலாமென்று 'கட்டுப்பாடு' சொல்லுகிறது.

***

☞ **சுருக்கிச் சொன்னால், 'மதம்'-"விடுதலை"யைப் போதிக்கிறது. 'குருக்கள் கட்டுப்பாடு' "அடிமைநிலை"யைப் புகழ்ந்து கீர்த்தனம் பாடுகிறது.**

# மதத்தைப்பற்றி இராஜப்பிரதிநிதியின் பேச்சு

மதத்தின் பெயரால் செய்யப்படும் அக்கிரமங்களின் மூலம், அந்த மதத்திற்கே கேவலம் ஸம்பவிக்கும் என்ற கருத்துத் தோன்ற, நமது இராஜப்பிரதிநிதி லார்ட் இர்வின் இந்தியாவில் உண்டாகும் மதக் கலவரங்களை மனதில் வைத்துக்கொண்டு செய்த பிரஸங்கத்தின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகின்றோம்:—

மதத்தைவிட மேலானதாக ஒன்று மில்லை.

எல்லா மதங்களிலும், மனிதர்களின் மனதில் ஒருவிதக் குறை இருந்துகொண்டிருக்கும். ஆயுளின் மர்மத்தில் ஒரு பின்னத்தை விட அதிகமாக அறிய முடியவில்லையே என்ற ஒரு உணர்ச்சி அதிகரித்தே நிற்கும். அதனால் இன்னும் மேலான விஷயங்களை யறிய வேண்டுமென்ற அவாவும் ஆர்வமும் இருந்து கொண்டே யிருக்கிறது.

மனிதர்கள் எந்த மதத்தைப் பின்பற்றிய போதிலும், மனித அறிவிற்கு அப்பால் உள்ள சக்திகளைத் தெரிவிக்க அது ஒருவித முயற்சியே யாகும்.

மனித இயற்கையை எவ்வாறு சீர்படுத்த முடியுமென்று கண்டு பிடிக்க முயற்சித்து, அவ்வழியால் உயிர் வாழ்வதன் முடிவான லக்ஷ்யத்தைப் பெறப் பிரயத்தனம் செய்யப்படுகிறது.

ஒன்றைச் சாதிப்பது மிகவும் சிரமம். பொறுமை, தாழ்மை முதலியவற்றின் மூலம்தான் அதைச் சாதிக்க முடியும். அப்போது பிறரிடமுள்ள குறைகளைச் சகித்துக்கொள்ள நேரும். ஆனால், அதனால் கிடைக்கக் கூடிய பலன் மிகப் பெரிதாகும்.

ஆகையால், மனிதனுடைய உயர்ந்த லக்ஷியங்களுக்கும், ஊக்கத்திற்கும் சின்னமாக இருக்கவேண்டிய மதம், அந்த உணர்ச்சிகளைக் கேவலப்படுத்தும் செய்கைகளுடன் உபயோகப்படுத்தப்படுவது மிகவும் பெரிய கொடுமையாகும்.

☞ இம்மாதிரியான துஷ்பிரயோகத்தைத் தடுக்காவிடில், அது மனித இயற்கைக்கும், இந்தியாவிற்கும், எந்த மதத்தின் பெயரால் அது வேஷத்துடன் திரியுமாறு விடப்பட்டதோ அந்த மதத்திற்கும் நிச்சயமான அழிவை யுண்டுபண்ணி விடும்.

---

காலம் கழிப்பது பெரிதல்ல. காலத்தைக் கழிப்பதால் ஒருவித நன்மையை யடையவேண்டும். மனதுக்குக் குற்றமற்ற இன்பமும் புத்தி விருத்தியும் உண்டாகும்படி காலம் கழிப்பதற்கு ஏற்ற உபாயம் நல்ல புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பதுதான்.

# பிரபஞ்ச தரிசனம்

**பெர்ஷியா** என்ற தேசம் ஆப்கானிஸ்தானத்துக்கு மேற்கே, ஆசிய துருக்கிக்குக் கிழக்கே வியாபித்திருக்கிறது. இது இந்தியாவில் மூன்றிலொரு பங்கு விஸ்தீரணமுள்ளது. ஆயினும் ஜனத்தொகை எழுபது லக்ஷம்தான். இவ்விராஜ்யத்தை ஆளும் அரசனுக்கு "ஷா" என்று பெயர். சில ஸமயங்களில் "ஷா இன்ஷா" ராஜாதி ராஜன் என்று இம்மன்னனை யழைப்பார்கள். இவ்விராஜ்யத்தின் மத்திய ஸ்தலம் பீடபூமி. சுற்றிலும் மலைகள் விசேஷமாயுண்டு. இந்தியாவிலிருக்கும் பார்ஷி வகுப்பினர் இத் தேசத்திலிருந்து வந்தவர்களாம். பெர்ஷியன்கள் இயற்கை யழகு படைத்தவர்கள். லக்ஷணமான முகமும், சிவந்த வர்ணமுள்ள சடை சடையான கேசங்களும் உள்ளவர்கள். பெர்ஷிய ஸ்திரீகள் கன்னத்தில் பலவித கோலங்களைச் செய்துகொள்வர். ஏழை ஸ்திரீகள் பச்சை குத்திக்கொள்ளும் வழக்கம் அதிகம், பெர்ஷியாவில் சில இடங்களில் செழிப்பான பூலங்களிருப்பினும், பல இடங்கள் மணற் காடாகவே இருக்கும். ஒட்டைகளும், ஜாதிக் குதிரைகளும் இத்தேசத்தில் விசேஷமாயுண்டு. விலையுயர்ந்த வஸ்திரங்களில் இந்நாட்டவர்க்குப் பிரீதி அதிகம். தனிகர் வீட்டு ஸ்திரீகள் முகத்தை மூடிக்கொள்வர். எளிய மாதர்கள் அவ்விதம் செய்யார். பெர்ஷியன்களுக்குப் பலவித உடைகளுண்டு. நாளைக்கு வா என்று சாக்கு சொல்வதில் இவர்கள் ஸமர்த்தர். ஸாதாரணமாய் பெர்ஷியன்கள் பிறரிடம் அன்பும் மரியாதையும் உள்ளவர்கள். ஒருவன் நான்கு மனைவிகளைக் கல்யாணம் செய்யலாம். சில ஸமயங்களில் மூர்க்கிகளான மனைவிகள் தங்கள் புருஷர்களைப் பாதரக்ஷையால் அடிப்பது முண்டாம். மிக்க இளமையிலே விவாகப் பேச்சுகள் நடக்கும். பின்னர் வயது முதிர்ந்தவுடன் மணமகன் மணமகளைப் பார்க்கலாம். முதலில் கண்ணாடியில் பார்த்துப் பின்னர் ஒரு கரும்பைப் பல்லாற் கடித்து இரண்டு துண்டாக்கி, ஒரு துண்டைத் தான் தின்று மற்றொரு துண்டை மனையாளுக்குக் கொடுப்பான். பிறகு ஸதிபதிகள் இல்லறம் நடத்துவர்.

***

இந்தியாவின் பிற்காலம் எவ்விதமாய் முடியுமோ சொல்லுதல் சாத்தியமல்ல. நமது மதம், ஆசாரம், பாஷை முதலிய அனைத்தையும் ஒரு பெரும்பானையில் ஒன்றாகப் போட்டுக் கொதிக்கவைத்துக் கொண்டிருக்கிறோம். அவைகள் கடைசியில் ஒன்றாய்த் திரளுமோ அல்லது தனித் தனியேதான் இருக்குமோ யார் சொல்லக்கூடும்?

***

நம்மவரிற் பல்லோர் அற்ப கல்வியைக் கற்றவர்களாயும், தங்களின் குறைந்த வித்தையை அறியாதவர்களாயும், பின்னால் தொடர்ந்து கற்கும் எண்ணமில்லாதவர்களாயும், அவர்களுடைய சக்திகளைப்பற்றிமட்டும் சில வேளை மிகைப்பட்ட அபிப்பிராயம் கொண்டவர்களாயும் இருக்கிறார்கள். இதில் பெண்களுக்கும் கூடப் பங்கு உண்டு.

***

ஒவ்வொரு மனிதனும் தன் பொருட்டும், தன் தேசம் அல்லது ஜாதியின் பொருட்டும், பொதுவாய் உலகத்தின் பொருட்டும் சிலவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான் என்று ஜப்பானியர் நினைக்கின்றனர். மேனாடுகளிலிருந்து ஜப்பான் கற்றுக்கொண்ட விஷயங்களெல்லாம் ஜப்பானில் அனுஷ்டானத்திற்கு வருமுன் மேனாட்டுக் குறிகளில்லாமல் ஜப்பானுக்கே உரியவையாகச் செய்யப்பட்டன. ஜப்பானில் கல்வி இலவசமாகையாலும், கட்டாயமாகையாலும் எழுதப்படிக்கத் தெரியாத ஒருவனைக் கூட அங்கு காண்பதரிது. ஒவ்வொரு ஜப்பானியனும் தான் ராஜ்யத்தில் ஒரு அவசியமானவனென்று நினைக்கிறான். இந்த உணர்ச்சிதான் ஒரு ஜாதிக்கு ஜீவாதாரமானது. 'ஜப்பானியன்' என்கிற ஜாதி அபிமானம் முதலிலே; பிறகு தான் குடும்ப அபிமானம் என்று ஒரே கொள்கையாக ஜனங்கள் கொண்டுவிட்டார்கள். இந்தக் கொள்கையே ருஷியாவினிடம் வெற்றி பெற வைத்தது. தற்போது இந்தியருடைய கொள்கை என்ன என்பது கேள்வி?

***

பெரியோர்களை மதிப்பதால் அவர்களின் சரித்திரத்தைப் பின்பற்றி அவர்களைப்போல் நாமும் செய்வதற்கு ஹேது உண்டாகிறது. அபிப்பிராய பேதங்கள் தலைவர்களுக்குள் ஏற்படுவது சகஜம். ஒருவர் மீது ஒருவர் குறை கூறுவதும் சாதாரணம். அதற்காக நாம் தலைவர்களை அலக்ஷியப்படுத்தாதிருக்கக் கடவோம். அவர்களுக்குள்ள பொறுப்பும், கவலையும், பளுவும் நமக்கு ஏற்பட்டால் நாமும் அப்படித்தான் இருப்போம்.

***

ஜாதிப்பகைக்கு மூடத்தனம் அல்லது தெரியாமை அடிவேராக இருக்கிறது. புத்தி விகாஸம் உண்டாயிருக்கிற விடத்தில் மதப்பகை அல்லது மதிகேடு ஒரு நிமிஷமாகிலும் நில்லாது. ஜாதியும் மதமும் வேறாயிருக்கிறபடியாலே ஒருவருக்கொருவர் சிநேகமாய்க் கூடி வாழக் கூடாதென்பதில்லை. எங்கு எந்த ஜாதியில் பிறந்தாலென்ன; ஒருவரையொருவர் சேரவொட்டாமல் இதுவரையில் பிரித்து வைத்திருந்த சமய பேதங்கள் எப்படி யிருந்தாலென்ன; தேசப் பொது வாழ்க்கையின் க்ஷேமத்துக்கு அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்தலே பெருங்கடனா மென்க.

***

மதத்தைவிட தேசமே பெரிது. தேச முன்னேற்றத்திற்கு எதிரிடையாக மதாசாரங்களில் எவையேனும் இருந்தால், அவற்றைத் தேசத்தின் பொருட்டாக விலக்கி வழி செய்து கொடுப்பதுதான் வாழ நினைக்கும் ஜாதியாருக்கு அடையாளமாகும். தேசம் காப்பாற்றப்பட்டால்தான் மதமும் காப்பாற்றப்படும். இதைமனதில் நன்கு பதிய வைத்துக்கொண்டால் ஹிந்து-முஸ்லிம் பிணக்குகள் சமாதானமாகப் போக இடம் உண்டு.

***

பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவில் ஸ்திரம் பெற்ற கால முதல் ஹிந்துக்களின் ஆசாரங்கள் ஸமூகத்தின் நல் வாழ்க்கைக்கு விரோதமாய் இருந்தபோது, அந்தத் துரைத்தனம் அவைகளை மாற்றி வந்திருக்கிறது.

ஹிந்துக்களின் பூர்வீக சட்டப்படி பிராமணர்கள் மற்ற ஜாதிகளைப்போல் தண்டனை யடையாமலிருந்ததை 'ஈஸ்ட் இந்தியாக் கம்பெனி'யின் துரைத்தனம் மாற்றியிருக்கிறது. மோக்ஷ லாபத்திற்காகக் கங்கை நதியில் விழுந்து உயிர் விடுவதையும், பிரார்த்தனைக்காகக் குழந்தைகளைச் சிங்காரித்து நதியில் துள்ளத் துள்ள விட்டெறிந்து கொல்வதையும், ஜனனவின் அந்தகாரத்தில் பெண் குழந்தைகளைக் கொல்வதையும் தடுத்துவிட்டது. கடன் கொடுக்க வேண்டியதென்று ஒருவன் வீட்டில் 'தர்ணு' (Dharna) கிடப்பதையும், அதாவது கடனைக் கொடுத்தாலொழிய வீட்டைவிட்டுப் போவதில்லையென்று அங்கே பட்டினியாய்ப் படுத்து உயிர் துறப்பதாகப் பயமுறுத்துவதையும் அது சட்ட விரோதமாக்கிவிட்டது. பிறகு ஸ்திரீகள் உடன் கட்டையேறுவது தண்டனைக்கு உட்படுத்தப்பட்டது. ஹிந்து விதவைகள் புனர் விவாகம் செய்து கொள்ளலாமென்றும், அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் சொத்துக்களுக்குப் பாத்தியம் கொண்டனவென்றும் சட்டம் செய்யப்பட்டது. ஒரு ஸ்திரீ தன் புருஷனுடன் சங்கமம் செய்ய இஷ்டப்பட்டாலும், அது சட்ட விரோதமென்று பினல் கோடில் செய்திருந்ததை லார்ட் லான்ஸ்டௌன் கவர்னர் ஜனரலாயிருந்தபோது பன்னிரண்டு வயதுக்குள்ளாகச் சங்கமம் செய்தால் 'ரேப்' என்னும் குற்றமாகுமென்று மாற்றப்பட்டது. இவைகளையும் பின்னும் சில திருத்தங்களையும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் சட்டத்தாற் செய்தனர். இந்தத் திருத்தங்களால் ஹிந்துக்களின் மதத்திற்கு ஏதாயினும் பழுது நேரிட்டுவிட்டதா? மதக் கருத்துகளின் கட்டுப்பாட்டை இத்திருத்தங்கள் தளர்த்தி ஒழுங்குபடுத்தியதேயன்றி, மதத்துக்கு எவ்வித பின்னமும் உண்டாக்கவேயில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது.

***

நமது மாணவர்களைப் பார்த்து—"இந்தியா யாருடையது?" என்ற கேள்வியைக் கேட்பின் "இந்தியா பிரிட்டிஷாருடையது" என்று உடனே விடை கூறுவர். அது சரியான விடைதானென்று உபாத்தியாயர்களும் தலையை யசைப்பர். இது ஒரு வகையில் உண்மையானாலும், தேச பக்தியுடன் சொல்லப்பட்ட விடையாகாது. இந்தியாவின் சீதோஷ்ண விசேஷங்களும், மலை, காடு, ஆறு முதலியவைகளும், மகா சேர்த்தியான சிருஷ்டித் தோற்றங்களும் நம்மவருடையதேயாகும். அதன் பூமியின் மேற்புறத்திலும் உட்புறத்திலும் உண்டாகும் அளவற்ற மதிப்புள்ள பொருள்கள் நமக்கே சொந்தம். அதில் பல நூற்றாண்டுகளாகத் தோன்றி வளர்ந்து அனுஷ்டானத்திலிருக்கும் பழக்க வழக்கங்களும், ஸ்தாபனங்களும் நம்மவையே. அதில் வெகு காலங்களாகப் பெயர் பெற்று நிலைத்து மதிக்கப்படும் தேவாலய-பிரம்மாலயங்களும், புண்ணிய க்ஷேத்திரங்களும் நம்மவையே. அனாதியான வேதங்கள், சாஸ்திரங்கள், புராண இதிகாசங்கள், பெரியோர் நூல்கள், சரித்திரங்கள், ஐதீகங்கள்—இவைகளும் இந்தியர்களாகிய நம்மவையே இந்தியாவின் தொழில்களும், வியாபாரங்களும், மற்றப் பொருள் மூலங்களும் நம்மவையே. இந்தத் திவ்ய தேசமாகிய பாரத வருஷம் இந்தியராகிய நமது மாதாவே. அந்தப் பாரதமாதாவின் பெரும் கீர்த்தியும் லாப நஷ்டங்களும் நம்முடையனவே. அதற்குப் பெருமையுண்டாவதும் சிறுமையுண்டாவதும் நம்முடைய செயலிலேயே யுள்ளன. இந்தியாவானது நம்முடைய தேசமே. அதன் உண்மையான மக்களும் அதில் பிறந்து வளர்

"ஆநந்தகுணபோதினி அநுபந்தம்"



செனிபில்டர் ஓர்க்ஸ் டிராயிங் புஸ்தகம்.

# செனிபில்டர் ஓர்க்ஸ்

லித்தோகிராபர்ஸ், கலர்பிரிண்டர்ஸ்.

40. வெங்கடேசகிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

"ஆனந்தகுணபோதினி அநுபந்தம்"

---

# செனிபில்டர் ஓர்க்ஸ்

## டிராயிங் புஸ்தகம்.

கவர்ன்மெண்ட் டெக்னிகல் பரிட்சைக்குப் போகும் லோயர் ஐயர் கிரேட் மாணவர்களுக்குப் பிரயோசனமுள்ள பிரி ஆண்டு டிராயிங் புஸ்தகம்

## பார்ட் I. ஆர்ன்மெண்ட்

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| விலை டிராயிங் மாஸ்டருக்கு | ரூபாய் | 1—0—0 |
| மற்றவர்களுக்கு ... ... | ,, | 1—8—0 |

தபால் சார்ஜ் பிரத்யேகம்.

## செனிபில்டர் ஓர்க்ஸ்

லித்தோகிராபர்ஸ், கலர்பிரிண்டர்ஸ்.

40, வெங்கடேசகிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

பவர்களும் நாமே. நமது முன்னோர்களின் எலும்புகள் அடக்கம் செய்யப் பெற்றதும் இந்தியாவிலேயேதான். இந்தியாவின் பொருட்டு உயிர், உடல், உடைமை எல்லாவற்றையும் வேண்டுமானால் ஒருங்கே அர்ப்பணஞ் செய்து, அதன் நற்பெயரைக் காக்கப் பாத்தியமேற்றவர்கள் நாமே! நாமே!! நாமே !!!

பாரதபூமி பழம் பெரும்பூமி,
நீர்—அதன் புதல்வர், இந்நினைவகற்றாதீர் !
பாரதநாடு பார்க்கெலாந் தெய்வமாம்,
நீரதன் புதல்வரிந் நினைவகற்றாதீர் !
பாரத நாட்டிசை பகர யான் வல்லனோ ?
நீரதன் புதல்வரிந் நினைவகற்றாதீர் ! (ஸ்ரீ பாரதி.)

### உன்னை எதிர்த்தவனைப் பற்றி.

உன்னை எதிர்த்தவனிடம் அப்போது உனக்கு உண்டாகிற ஆத்திரத்தை எந்த விதமாவது அடக்கிவிடு. அப்பால் அந்த சம்பவத்தையே மறந்துவிட்டது போலவும் நடந்துகொள். இன்னும் வேண்டியவனாகவும் காட்டு. ஆனால், உன்னை அவன் எதிர்த்ததை மட்டும் என்றும் ஞாபகத்தில் இருத்தி நல்ல அனுபவஞானம் பெற்றுக்கொள். இனி எந்த வகையிலும் அவன் உன்னை எதிர்ப்பதற்கு எவ்விதப் பிடிப்பும் கொடுக்காமல், அவன் சம்பந்தம் இனி இல்லாமலே செய்துகொள். இனி எந்த நாளிலும் அவன் உன்னைத் தூஷிப்பதற்கு இடமில்லாமல் ஜாக்கிரதையுடன் செல். அதுவே பெரிய வெற்றி.

பூர்வ கிரந்தங்களின் மகிமை அவற்றை எழுதியவர்களோடு போயிற்று. எதுவும் நித்தியானுஷ்டானமாயிருக்கவேண்டும். புராதன கிரந்தங்களில் அநேக விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. 80-வயதுள்ள விருத்தரொருவர் தமது பூர்வீகர்கள் வைத்துள்ள ஆஸ்தி இதுதானென்று அநேக ஓலைக் கட்டுகளைக் கொண்டுவந்து வெயிலில் போட்டார். இன்று எழுதியதுபோலுள்ள அக்ஷரங்களும் ஓலையின் அழகும் பார்க்க ஆநந்தமுண்டாயிற்று. அக்ஷர ஞானமில்லாததோடு செவி ஸூக்ஷ்மமும் குறைந்து போயிற்று. பூர்வ கிரந்தங்கள் மூலையில் கிடக்கின்றன. எதிரில் மண்ணால் மூடப்பட்ட ரத்நமிருப்பதை அவிவேகி எப்படியறிவான். நமது பூர்வீகர்களின் உத்தம புத்தி சாதுரிய ஞானக்கண்களை எப்போதடையப் போகிறோம் ?

# 'ஸாக்ரடிஸ்' என்பவரின் உள்ளறிவு

ஸாக்ரடிஸ் என்னும் தத்வ சாஸ்திரியைப்பற்றி அநேகர் நன்ரு யறிவார். இவர் கிரீஸ் தேசத்தில் பிறந்தவர். மகா புத்தி மான். இவருடைய அற்புதமான காரியங்க ளெல்லாம் இவருடைய சிஷ்யர்க ளெழுதிய புஸ்தகங்களால் வெளியாகின்றன. இந்த தத்வசாஸ்திரி தாம் ஒரு காரியத்தைச் செய்யுமுன் அது கெடுதலா யிருக்கும் பக்ஷத்தில் செய்ய வேண்டாமென்று ஏதோ ஒரு எண்ணம் மனதில் தோன்றுமென்று அடிக்கடி சொல்லி யிருக்கிருர். நமது அறிவுக்கு எட்டாத உள்ளறிவு ஒன்றிருப்பதும், அது திடீரென்று சிற்சில வேளைகளில் நம்மை ஸத்விஷயமான பாதையில் நடத்துகிறதென்றும் ஸாக்ரடிஸ் கூறி யிருக்கிருர். ஒரு ஸமயம் அவர் எங்கேயோ போக நினைத்து எழுந்ததாயும், உடனே உள்ளறிவு அவரைப் போகவேண்டாமென்று தடுத்ததாயும், பிறகு ஒரு நிமிஷம் கழித்து அநேக சிஷ்யர்கள் வந்து தம்மிடம் நல்லுரைகளைக் கேட்டுப் பயனடைந்தார்க ளென்றும், தாம் முன்பு நினைத்தபடி வெளியேறி யிருந்தால் அத்தனை சிஷ்யர்களும் தம்மைக் காணுது ஏமாந்திருப்பரென்றும் சொன்னுர்.

இப்படிப்பட்ட உள்ளறிவு இப்போதும் அநேகருக்கு ஒவ்வொரு ஸமயத்தி லுண்டாகி விபத்தி லகப்பட்டுக் கொள்ளாதபடி தப்ப வைக்கிறது. ஒரு டிரைவர் ரயில் வண்டியைப் பாலத் தருகில் தன்னையே மறந்தவனுய்த் திடீரென்று நிறுத்திவிட்டான். அவனுக்கு அவ்வண்டியை அங்கே நிறுத்த வேண்டுமென்ற எண்ணம் அதற்கு முன்னுல் உண்டாகவில்லை. திடீரென்றே உண்டாயிற்று. அவ்வாறு உண்டானதற்குக் காரணமும் தெரியவில்லை. உடனே வண்டியினின்றும் கீழே இறங்கிப் பார்த்தான். பாலம் அபாயமான நிலைமையி லிருந்தது. நல்ல வேளையாய் வண்டியை நிறுத்திேனுமென்று ஸந்தோஷப்பட்டான். இது உள்ளறிவின் தூண்டுதலால் நிகழ்ந்த எச்சரிக்கையாகும். இவ்விதமே கிரந்தகர்த்தர்களும் உள்ளறிவின் துணையைக் கொண்டே புதிது புதிதான யோசனைகள் உண்டாகப் பெற்றவர்களாய் நவநவமான நாநாவித நூல்களையும் இயற்றி உலகுக்கு உபகரிக்கக்கூடிய சக்திவந்தர்களாகிறர்கள். உள்ளறிவின் மகத்தான சக்தி விசேஷத்தினலேயே அவர்களின் கல்விக்கும் பன்மடங்கு மீறிய அத்யத்புதமான விஷயங்கள் அவர்கள் இயற்றிய நூலில் அமைந்து விடுகின்றன. பிறகு அவர்களே "இதை நாமா எழுதினேம்" என்று ஆதிசயிக்கின்றனர். வெளி யறிவு எதையும் யோசித்து யோசித்து மந்த கதியான நடையில் மெதுவாக எழுத வைக்கும். உள்ளறிவோ எதையுமே யோசியாமல் மடமடவென்று ஆற்றின் பிரவாகம்போல் விஷயங்களை வாரிக் கொட்டிக் கொண்டே தந்து சென்று, தன்னையும் அறியாத மகா வேகத்துடனும் எழுத வைத்து, சொற்ப நேரத்தில் பல நூறு பக்கங்களாக்கி விடும். பிரஸங்க ஸாமர்த்தியமும் இவ்விதமே. வெளியறிவு பேச்சின் மத்தியில் நின்று யோசித்துப் பிறகு பேச வைக்கும். உள்ளறிவோ எதையுமே யோசியாமல் தன்னையும் மறந்து மழை வருஷிப்பதுபோல் வருஷித்து யாவரையும் பிரமிக்க வைத்துவிடும். எனவே, உள்ளறிவின் மகாத்மியம் மகா பெரிது.

இப்படிப்பட்ட உள்ளறிவானது ஸாக்ரடிஸுக்கு எப்போதும் உதவி செய்துகொண்டிருந்தது. ஆனால் அவரை நியாயாதிபதி விசாரித்து அநியாயமாக மரண தண்டனை விதித்தபோது அவ்வறிவு தப்பித்துக் கொள்வதற்கான எவ்வித எச்சரிக்கையையும் செய்யவில்லை. அப்படித் தான் முடிவு என்று உள்ளறிவு அறிந்துகொண்டு மௌனமாய் இருந்து விடுகிறது போலும்! எனவே தற்காத்துக் கொள்வதற்கான யுக்திகள் எதையும் அவ்வறிவு அவருக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. இதை யுணர்ந்த ஸாக்ரடிஸ் தமது மரணம் விதியின்படி நேர்ந்ததென்று நிச்சயித்து, அது தமக்குத் துன்பகரமாகத் தோற்றப்படவில்லை யென்று தம்மருகே யிருந்த சிஷ்யர்களுக்கு வெளிப்படுத்தினர்.

'ஜோன் ஆப் ஆர்க்' என்னும ஸாமான்யப் பெண் சிறுபோது முதல் மேலே கூறிய உள்ளறி விருக்கப் பெற்றவள். ஆதலின் மிதஸமத்காரமாய் முன்னதாக அறிந்து பிரென்சு அரசனைக் காப்பாற்றினள். செயற்கரிய காரியங்களைச் செய்து முடித்தாள். அநேகர் அவளைச் சூன்யக்காரி என்றனர்கள். இத்தகைய விவேகசாலினிக்கு மரணம் நெருங்கிய போது அதற்குமுன் வரையில் அவளுக்கு உதவியாயிருந்த உள்ளறிவானது அந்த மரணத்திற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான விதமாய் எவ்வித எச்சரிக்கையையும் செய்யவில்லை. தனக்கு அவ்வளவு தான் உலகவாழ்வென்று கண்டு கொண்டு மரணத்தை ஸாந்தமான சித்தத்தோடு ஏற்றுக் கொண்டாள். எனவே, உள்ளறிவின் ஸக்தி கைகூடி வரப்பெற்ற மகாத்மாக்களுக்கு வினையின் பிரகாரம் நேர்ந்து கொள்ளுகிற மரணமானது துக்ககரமாகத் தோன்றாதென்பது மேலே கூறிய இரண்டு உதாரணங்களாலும் நன்கு விளங்குகிறது.

வெளியறிவின் சக்தி பழக்கத்தாலும் பயிற்சியாலும் அமையப் பெறுவதாகும். வெளியறிவுடன் வேதாந்த நூல்களைப் பயில்வோர் தாம் பயின்ற அளவுக்கு மட்டுமே தெரிந்தவர்க ளாவார்க ளன்றி அதற்குமேல் உள்ளூர அவற்றை யறிந்து அநுபவித்து ஆநந்தக் கண்ணீர் சொறியும்படியான மனோ பக்குவத்தை ஒருபோதும் எய்தப் பெறார். வெறும் புஸ்தகப் பூச்சிகளாகவே முடிவர். உள்ளறிவின் திறனோ பயிற்சியால் அமையப் பெறாமல் பிறவியிலேயே தாய்வயிற்றில் கருவுடன் அமைந்து இயற்கையாகவே நறுமணங் கமழ்வதாகும். அத்தகையோர்க்கு வேதாந்த நூல்களைப் பார்த்த அளவிலேயே பரிபக்குவம் உண்டாகி ஆநந்தக் கண்ணீரின் ஊற்று பிரவகித்து விடும். இந்த இயற்கையின் அமிர்தம் கைவரப் பெற்றோரின் மகாத்மியத்தைச் சொல்லவும் கூடுமோ?

1. செல்வம், கீர்த்தி, காதல்—இவைகளில் எதை ஒரு ஸ்திரீ தேடுவது?

2. எதனால் மனிதன் வாழ்க்கைக்குள் அடங்கிக் கஷ்டங்களைப் பொறுமையோடும் சகிக்கிறான்?

3. எதை நீ நேரில் அடைய விரும்புவாய்?

4. உன் வாழ்நாளை எப்படிக் கழிக்க உத்தேசம்?

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(201-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

17. அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போதுமா?

18. அண்ணன் தம்பிதான் சென்மப் பகையாளி.

இவ்விரண்டு பழமொழிகளும் அன்பின் காரணத்தாலேயே தோன்றியவை. ஒன்றுக்கொன்று சம்பந்தமுமுடையவை. "அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போதுமா" என்ற பழமொழியை முதலில் எடுத்துக் கொள்வோம். இது அண்ணனுக்கும் தம்பிக்கும் ஏற்படுகிற விரோதத்தை முதலில் குறிப்பிட்டு, அதன் பிறகு அவ்விதம் ஆயிரம் விரோதங்கள் ஏற்பட்டாலும் ஒன்றுக்குள் ஒன்றாகச் சம்பந்தப்பட்டுப்போயிருக்கிற தொடர்பும்—அன்பும் என்றைக்கும் விட்டுப்போகாதென்றும், எவ்வளவு பகைமை சண்டைகளிலும் அந்த அன்பின் பாசம் அடுத்தடுத்து வந்து தோன்றிக்கொண்டு, "அல்லவென்று போதுமா" என்று சொல்லத்தக்க வண்ணமாக—அது ஒரு பக்கம் இருந்துகொண்டுதான் இருக்குமென்றும், ஆகவே இன்றைக்கு விரோதப்படுகிறவர்கள் நாளைக்கு எப்படியும் கூடிக்கொள்ளக் கூடுமென்றும் எடுத்துக் காட்டுகிறது. அண்ணன் தம்பிகளுக்குள் பகைமை-சண்டை என்றைக்கும் நீடித்துவரக் கூடியதல்ல. உடன்பிறப்புப் பாசமும் அதிலிருந்து வற்றாது ஊறிச் சுரக்கும் அன்பின் பிரவகிப்பும் ஒரு பக்கம் இருந்துகொண்டிருக்கையில், என்ன விரோதங்கள் நேர்ந்தாலும் பிறகு சமரஸப்பட்டுப்போகக் கூடியதாகவே இருக்கும். உடன் பிறப்புக்கு மட்டுமல்ல, பெரிய, சிறிய தந்தையின் குமாரர்களாக இருப்பினும், பெரிய சிறிய தாயார்களின் மக்களா யிருப்பினும் அந்த வகையிலிருந்து தோற்றும் அண்ணன் தம்பி பாசமும்கூட இவ்வாறாகவே அன்பில் பந்தப்பட்டுப்போய் எந்தப் பகைமையும் நீடித்துக் கிளைக்கும்படி செய்யாமல் இடையிலே சமாதானப்பட்டுப்போகக் கூடியதாகவே முடிந்துவிடும்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் ஏன் சண்டை மனஸ்தாபம் உண்டாகிறது? சொத்துக்கள், பாகம்போட்டுக் கொள்ளுதல் இவற்றின் காரணமாகத் தோன்றலாம். பொறாமையும் கொஞ்சம் இதில் தோன்றலாம். தகப்பனார் தன் மூத்த குமாரனையே விசேஷமாகக் கவனித்து இளையவனை அவ்வளவு பாராட்டாதிருக்கலாம். இதிலிருந்தும் பொறாமை விளையலாம். தன் இரு குமாரர்களுக்கும் அவர் உத்தம திருஷ்டியுடனேயே தக்க இடத்தில் பெண் பார்த்து விவாகங்கள் நடத்தியிருக்கலாம். இளையவனுக்கோ அதிர்ஷ்டம் குறைவாயிருந்து அவனது மனைவி தவறி, பிறந்த குழந்தையும் போய் மறுபடியும் ஒண்டி மனிதனாகி நிற்கலாம். மூத்தவனோ ஸம்சாரமும் குடித்தனமுமாக ஓங்கி ஐந்தாறு குழந்தைகளுக்கும் தந்தையாய் விளங்கலாம். இதிலிருந்து மூத்தவனைப் பாக்கிய முள்ளவனாக நினைத்து, அவன்மீது அதிக அன்பும், இளையவனின் துரதிர்ஷ்டத்தைப்

பார்த்து அவன் மேல் சலிப்பும்கொண்டு, இளையவனுக்கு மறு விவாகம் நடத்தி வைக்க எண்ணமில்லாமலே, எல்லாம் மூத்தவனையே கவனித்துக் கொண்டு போவதாய் இருக்கலாம். மூத்தவனின் மக்களுக்கு வரிசையாய் விவாகங்களை நடத்திக் குடும்பச் சொத்தை யெல்லாம் மூத்தவனுக்கும் அவன் மக்களுக்கும் மட்டுமே செலவிட்டுக்கொண்டு செல்வதாகலாம். இளையவனுக்கோ வீட்டில் சாப்பாடு மட்டுமே. அவன் எக்கெதி கெட்டாலும் கவனியாமல் துரதிர்ஷ்டம் பிடித்தவன் என்று பழிப்பதாகவும் அலக்ஷியப்பதாகவும் இருக்கலாம். இதிலிருந்தும் தம்பிக்கு ஆத்திரமுண்டாகிறது; பொறாமை மூண்டுகொள்கிறது; எல்லாம் தன் தமயனுக்கே செய்து, தன்னைக் கவனியாமல் இருக்கிறாரே என்று அகங்காரப்படலாம். ஆனாலோ, எல்லாம் தகப்பனாருடைய சொந்தப் பிரயாசையின் மேல் சேகரிக்கப்பட்ட சொத்துக்களா யிருப்பதனால், அவரை எதிர்த்துத் தான் ஏதும்செய்ய வல்லமையற்றவனாய், பல்லைக் கடித்துக்கொண்டு உள்ளுக்கு வருத்தம் பொங்கியவனாய்க் காலத்தைத் தள்ளலாம். அப்படித் தள்ளுகிற காலத்திலும் கூடப் பல சமயங்களில் உடற் பிறப்புப் பாசத்தால் அண்ணனோடு கூடிக் கொண்டு பல வேலைகளும் வீட்டுக் காரியங்களும் செய்பவனாய் ஒத்துழைப்பவனாகவும் இருக்கலாம். இன்னும் அண்ணன்மீது கோபம் பொறாமை ஆத்திரம்கொண்டிருந்தாலும், அவன் மனைவியாகிய அண்ணியை உயிருக்குயிராக நினைத்து அன்பு பாராட்டியும் வரலாம். அண்ணியார் காலில் குத்திய முள் தன் கண்ணில் குத்தியதுபோல் பட்டு அவ்வளவு பிரியத்தை அண்ணி மேல் வைத்து மிருக்கலாம். அதற்கும் மேலாக அண்ணனுடைய குழந்தைகள் மேல் ஆசை வைத்தும் அலையலாம். அவர்களைத் தூக்கிக் கொண்டும் திரியலாம். புசிக்கும் வேளையில் அண்ணன் குழந்தைகள் இலைக் கருகில் உட்கார்ந்துகொள்ள அவர்களுக்கு இவன் அன்னம் ஊட்டலாம். தன் தந்தையிடம் எல்லாம் அண்ணனுக்கே செய்கிறாய், எனக்கென்ன செய்தாய், எப்போது எனக்குக் கலியாணம் செய்துவைக்கிறாய் என்று பெரிய சண்டை போட்டுவிட்டு, அதே நிமிஷம் அண்ணியிடம் போய் தாகத்துக்கு ஜலம் கேட்டு அருந்திவிட்டு அண்ணன் குழந்தை யொன்றைத் தூக்கிக்கொண்டு தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்து அக்குழந்தையுடன் கொஞ்சிக்கொண்டு இருக்கலாம். நேற்று அண்ணனிடம் பெரிய சண்டையிட்டுவிட்டு, இன்று அண்ணனுக்கு காலரா என்றால், நேற்று நடந்த சண்டையை மறந்து போய், உடனே வைத்தியர் வீட்டுக்கு ஓடியும், எப்படியாவது அண்ணன் பிழைக்கவேண்டுமே யென்று அங்கலாய்த்தும் அன்பால் கண்ணீர்விட்டுக் கலங்கி, என் அண்ணனைக் காப்பாற்று என்று தெய்வத்தை நோக்கியும் பிரார்த்திக்கலாம். அண்ணனிடம் சண்டையிட்டு விட்டு அண்ணியிடம் வந்து சாப்பாடு போடும்படி சொல்லி இலையில் உட்காரலாம். அண்ணனிடம் பகைமைகொண்டு பேசாமல், அண்ணியிடம் மட்டும் பேசலாம். அண்ணியிடம் பெரிய சண்டையிட்டுவிட்டு வேறிடத்தில் புசிப்பு வைத்துக்கொண்டு, அண்ணனோடு மட்டும் வெகு அன்பாய்க் கூடிக் குலாவலாம். எனவே, ஒரு பக்கம் கலகம், சண்டைகள் நேர்ந்து பகைமை முற்றினாலும், மற்றொரு பக்கம் பாசமும் அன்பும் கூடிக்கொண்டு உறவாடவே செய்துவிடுவதனால்தான் அண்ணனுக்குத் தம்பி அடியோடு அல்லவென்று போய்த் தீர்ந்துவிடுகிற சங்கதியல்ல யிது வென்பதையே 17-வது பழமொழி எடுத்துக் காட்டுகிறது.

மூத்த குமாரனுக்கே எல்லாம் செய்து இளையவனைக் கவனிக்காமலே காலத்தைக் கழித்துவிட்ட தந்தை கடைசியில் கண்ணை மூடிக்கொள்கிருர். உடனே பாகப் பிரிவினை விவாதம் நேர்ந்துகொள்கிறது. அது விசேஷமாய்ப் பந்துக்கள் வந்து சூழ்ந்துகொண்டுள்ள கருமகிரியை யன்றைக்குத் தொடங்கிக்கொள்ளுகிறது. நியாயப்படி பாகம் செய்கிருயா, அல்லது பாக சொத்துக்கு வியாஜ்யம் செய்யட்டுமா வென்று தம்பி குதிக்கிருன். அந்தச் சமயம் அவனிடமிருந்து கொஞ்சம் பறித்துக்கொள்வதற்காகச் சிலர் அவனுக்கு மகா வேண்டியவர்கள்போ லிருந்துகொண்டு, அண்ணனைப் பார்த்து, ஆமப்பா, உன் தம்பிக்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டாமா, உன் தகப்பனுர்தான் காலமுழுதும் அவனைக் கவனிக்காமலேயே போய் விட்டார், எல்லாம் உனக்கே செய்து ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணும்புமாய் ஓரவஞ்சனை செய்துகொண்டு போனுர். அவர் காலத்தில் அது நடந்துவிட்டது, நிறைவேறியும்விட்டது. அவருக்குப் பிறகு இப்போது அது செல்லுமா? அவன் பாக வியாஜ்யத்துக்குப் போவதாகச் சொல்லுகிருனே, சட்டப்படி உனக்குள்ள பங்கில் அவனுக்குப் பாகம் உண்டல்லவா? வீணுகக் கோர்ட்டுக்கும் வக்கீல்களுக்கும் ஏன் வாரிக் கொட்டவேண்டும்? நாங்க ளெல்லாம் வந்திருக்கிறேம், எங்களுக்கு முன் பாகவே சமரஸப்பட்டுப் போய் ஒரு முடிவு செய்துவிடுவதுதான் உத்தமம், என்ன சொல்லுகிருய், என்று அண்ணனைக் கேட்கத் தொடங்கிக் கொள்கிருர்கள். வீட்டுத் தலைவர் இறந்த நாள் முதல் இதே பேச்சு மத்தியஸ்தர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அண்ணனே திகைக்கிருன், அவ்வளவு சொத்துக்களையும் தம்பிக்கு எப்படி வாரிக்கொடுக்கிற தென்று ஏங்குகிருன். தனக்குத் தம்பி என்று எவனும் பிறவாமல் இருந்திருக்கக் கூடாதா வென்றுகூட அந்தச் சமயத்தில் கொஞ்சம் நினைத்துக் கொள்கிருன். தனக்குத் துணையாக, தனக்குப் பெண்ணைக் கொடுத்த மனைவியின் வீட்டார்களோடு கலந்து யோசித்தபடி இருக்கிருன். இந்த வகையில் அண்ணன் தம்பி ஜென்மப் பகையாளி யாகிருர்கள். தகப்பனைச் சேர்ந்தவர்கள் இளையவன் பக்கம் சேருகிருர்கள். அண்ணனுக்கோ அவன் மனைவி வீட்டார் அவன் பக்கமாய்த் துணைப்பலமாகிருர்கள். மத்தியஸ்தர்கள் அண்ணனிடம் வந்து, என்ன அப்பா, உன்னைப்போல் அவனுக்கும் ஒரு காய்ப்பு காய்க்கவேண்டாமா, அவனும் மனைவியும் குடித்தனமமாய் வாழவேண்டாமா, அவனுக்கு விவாகம் நடக்கவேண்டாமா, சும்மா இருந்தால் எப்படி, அவர்கள் பெண் கொடுக்கிறேன் என்கிருர்கள், இவர்கள் பெண்ணைத் தருகிறேன் என்கிருர்கள், என்ன சொல்லுகிருய், ஏதாவது ஓரிடத்தில் பேசி முடித்து, ஒரு வகையாய் பாக சங்கதியும் தீர்த்து சமரஸமாகப் போவதுதான் மேன்மை என்று தங்கள் புராணத்தை ஆரம்பித்துக் கொள்கிருர்கள். அண்ணனும் தன் 'பிகுவு' 'ராங்கி' விடாமல் மூர்க்கத்தனமாய் முறண்டிப் பார்த்துக் கடைசியில் இடம் விட்டுக் கொடுக்கவேண்டியதாகவே தீர்ந்து பாகப் பிரிவினையும் பத்திரம் எழுதி ரிஜிஸ்தராவதுமான திருவிழாக்க ளெல்லாம் நடந்தேறுகின்றன. இக்கலகங்களை யெல்லாம் தீர்த்து வைப்பதற்குத் தான் தாங்கள் வந்திருப்பது போல் காண்பித்துக்கொண்டு பலர் நெடுநாள் வரைக்கும் வீட்டில் உட்கார்ந்துகொண்டு நல்ல சாப்பாடு சாப்பிட்டுக் கொள்கிருர்கள். அத்துடன் மட்டுமா? பொடி, சுருட்டு, குடி எல்லாவற்றுக்கும், கூடச் செலவுகளுக்

கும் வாங்கிக் கொள்கிறார்கள். இடையில் அகப்பட்டதையும் சுருட்டிக் கொள்கிறார்கள். 'வேகிற வீட்டில் பிடுங்கினது லாபம்' என்பது போலவும், 'வெந்த வீட்டில் தின்றது லாபம்' என்பது போலவும் வந்தவரையில் வரவு சுற்றிக் கொள்கிறார்கள்.

பாகம் முடிந்ததும், இளையவனுக்கு நான், நீ என்று பலர் பெண்ணைக் கொடுக்கத் தயாராகிறார்கள். தகப்பனார் இறந்த 'இழவு' தீர்ந்ததும், இந்த விவாகத் திருவிழா தொடங்கிக் கொள்கிறது. வெகு சம்பிரமமாய் விவாகம் நடக்கிறது. வயிறு காய்ந்தவனும், பேதிக்கு மருந்துண்டவனும் இலையில் எவ்வளவு பசியுடன் உட்காருகிறார்களோ அவ்வளவு செலவுப் பசியுடனே தான் ஆசை தீருகிறவரையில் தம்பி செலவு செய்து தீர்க்கிறான். அந்த விவாகத்துக்கு அண்ணனும் கூட இருந்து உள்ளே என்ன ஆத்திரம் இருந்தாலும் அடக்கிக்கொண்டு ஊர் மெச்சுவதற்கு அந்த இந்த வேலைகள் எல்லாம் செய்து தீர்க்கிறான். என்ன பகைமை இருந்தாலும் "அல்ல வென்று போகுமா?" கூடிக்கொண்டுதான் வேலை செய்யவேண்டியிருக்கிறது. கடைசியில் பாகம் பிரிந்து, வெவ்வேறு குடித்தனமாய் வாழ ஆரம்பிக்கிறார்கள். இனி அவர்கள் ஒன்று சேருவது ஏது என்று அவ்வளவுக்கு முற்றியிருந்த பகைமை எல்லாம் நாளடைவில் மாறி, ஒருவருக்கொருவர் வர—போக—பழய உறவாய் மாறிப் போகிறார்கள். அவ்வளவு விரோதங்களும் பறந்துபோகின்றன.

இன்னும் வியாஜ்யத்துக்குப் போகிறார்கள், ஒருவருக்கொருவர் அடிபிடி சண்டை செய்கிறார்கள், ஒருவரைக் கெடுக்க மற்றொருவர் முயல்கிறார்கள். அண்ணனுக்குத் தம்பி விஷம் வைக்கப் பார்க்கிறான், அண்ணனைக் கொலை செய்து பழிவாங்கத் தம்பி தயாராகிறான். அண்ணன் வியாபாரத்தைக் கெடுக்கத் தம்பி முயல்கிறான். தம்பியின் வர்த்தகத்தைப் பாழாக்க அண்ணன் தயாராகிறான். எந்த இடத்தில் தம்பி நல்ல நாணயத்துடன் வியாபாரச் சரக்குகள் தருவிக்கிறானோ, அந்த இடத்திற்கு அவன் மோசக்காரன், அதிக சரக்குகள் தரவேண்டாம் என்று அண்ணன் அநாமதேயக் கடிதங்களை எழுதிப் போடுகிறான். தெருவில் நடக்கும் போதோ, வீட்டில் ஸ்நானம் செய்யும் போதோ, இரவில் தூங்கும் போதோ ஒரு பெரிய கல் தலையைப்பார்த்து விழுந்து இரத்தக் காயங்களுமாகிறது. இரு, உன்னை உயிருடன் விட்டேனா என்று ஒருவருக்கொருவர் 'கருவு'கிறார்கள். மீசையை முறுக்குகிறார்கள், இவ்வளவு விரோதத்திலும் கூட இருவருக்கும் தாயாய், தமக்கையாய், சிறிய பெரிய தகப்பன்மார்களாய் இருக்கிறவர்களிடம் அன்பும் உறவும் காட்ட வேண்டியதாகவே ஏற்பட்டுப்போய், அந்த வகையிலிருந்தும், அந்தப் பெரியோர்களின் மத்தியஸ்தம் - சமாதானம் இவற்றிலிருந்தும் மறுபடியும் ஒன்று சேர்ந்து உறவாகிப் போகிறார்கள். இவ்விருவருக்கும் ஒரே உயிரான தாயார் பாயிற் படுத்துக் கொண்டால் அங்கு அண்ணனும் தம்பியும் வரவேண்டி யிருக்கிறது. அப்போது நெடுநாள் பேசாமல் இருந்தவர்கள் பேசிக்கொள்ள நேர்ந்து விடுகிறது. பழய அன்போடும் அண்ணன் தம்பியை அதிகாரம் செய்கிறான். வேலைகள் இட்டுச் செய்யச் சொல்லுகிறான். தம்பியும் தன் பகைமை மறந்து தன் அண்ணன் என்ற விசுவாசத்தோடும் மிக்க அக்கரையுடன் வேலைகள் செய்யவும் வெளியில் போய்ச் செலவு

கள் வாங்கி வரவும் தொடங்கிக் கொள்கிறான், இருவரும் ஒன்று பட்டுப் போகிறார்கள். அண்ணன் மேல்தான் விரோதம், அண்ணியின் மேல் எனக்கு விரோதமா என்கிறான் தம்பி. தம்பி மேல் தான் எனக்கு சண்டை, அவன் மனைவிமேல் எனக்கு என்ன பகையா, நான் பார்த்து வைத்த பெண் எனக்குச் சொந்த மில்லாமல் போகுமா என்கிறான் அண்ணன். இவ்வாறாக "அண்ணன் தம்பிதான் ஜென்மப் பகையாளி" என்று இருந்தாலும், கடைசியிலும்-இடையிலும்-விட்டு விட்டும், அவர்கள் முற்றிலும் விட்டுவிட முடியாத அன்பு காரணமாக மறுபடியும் ஒன்று சேர்ந்து கொள்வதிலே, "அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போதுமா?" என்று பிறர் சொல்லிக் காட்டும்படியாகவே காரியங்கள் சம்பவித்துக் கொள்கின்றன. ஒருவருக்குச் சந்ததி யில்லாமற் போனாலும் அந்தச் சொத்துக்கள் கடைசியில் மற்றொருவருக்குச் சேர்வதான தாயாதி பாத்தியம் ஒன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதால், அந்த வகையிலும் அடியோடு அற்றுப் போவதா யில்லாமல், "அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போதுமா?" என்றும் அவ்விடத்தில் சொல்லவேண்டியதாக ஆகிவிடுகிறது. எனவே 17 - 18 - பழமொழிகள் ஒன்றுக்கொன்று சம்பந்த முடையதாகவே நின்று, அன்பின் காரணமாகவும் பாத்தியதையின் காரணமாகவும் எல்லாம் நடப்பதாக இருக்கிறது.

இனி 18-வது பழமொழியான "அண்ணன் தம்பிதான் சென்மப் பகையாளி" என்பதைப் பற்றி அடுத்த பத்திரிகையில் ஆராய்வோம்.
(தொடர்ந்து வரும்.)

---

புருஷன்—மனைவி, கொண்டார் - கொடுத்தார், அண்ணன் - தம்பி, தாய் தந்தையர் - மக்கள், பாட்டி - பேரன்கள், இவர்களுக்குள் தலைபோகும்படியான அவ்வளவு பெரிய சண்டைகள் நடக்கும். பிறகு அவர்கள் மறுநாள் ஒன்றாய்ப் போய்விடுவார்கள். ஆகவே, அவர்களின் சண்டையில் நீ எவர் பக்கமும் நில்லாதே. தூர நின்று ஒதுங்கிக் கோள். அத்தனை பேர்களுக்கும் வேண்டியவனான மாதிரியில் நீ நடந்து போ. அது தான் எவருடைய விரோதத்தையும் சம்பாதியா திருப்பதற்கு நல்ல வழி.

தனவந்தர்களா யிருப்போர் விலை நயமா யிருக்கும்போது எதேஷ்டமான தானியத்தை மூட்டை மூட்டையாக வாங்கி அடுக்கி வைத்துக் கொண்டு பஞ்ச காலத்தில் ஏழைகட்கு அதே விலை அல்லது கொஞ்சம் ஏற்றமான விலைக்குக் கொடுத்தால் நலமன்றோ? இது பெரிய தர்மமுமாகும். இதற்கு முன் வருவோரைத்தான் காணோம். ஆனால் மோட்டார் வண்டியில் பெரிய தொகையைப் போட மட்டும் பலர் தயாராய் விடுவர்!

# காலணாவுக்கு ஒரு பவுன் மோதிரம்

நீலமேக முதலியார் மிக்க ஐச்வரிய வந்தர். தர்ம குணம் அவருக்கு விசேஷம். அவர் வஸித்து வந்த கும்பகோணத்தில் அவருக்கு நல்ல பெயருண்டு. பரம்பரைப் பிரபுக்களில் அவரும் ஒருவர். தமது உடற் பிறப்பான தங்கையை எவ்வளவோ செல்வமாய் வளர்த்துத் தகுந்த இடத்தில் விவாகம் செய்து கொடுத்தார். அத்தங்கைக்குப் பிறந்த குமாரத்தியை, சம்பந்தம் விட்டுப் போகக் கூடாதென்று அப்பெண்ணுக்கு மூன்று வயதாய் இருக்கும்போதே தமது பத்து வயதுள்ள குமாரனுக்குக் கொடுக்கச் செய்து விவாகத்தை நடத்தி வைத்துவிட்டார். தங்கையும் தமையனும் மிக்க அன்னியோன்னியமாய் இருந்து வந்தனர்.

***

இதன் பின் பம்பாய்க்குச் சென்று கூட்டு வியாபாரம் செய்யக்கருதி நீலமேக முதலியார் தமது குடும்ப ஸகிதம் புறப்பட்டுச் சென்றார். சில வருஷங்கள் வரை வியாபாரம் மிகவும் பிரபலமாக நடந்து வந்தது. நம்மவர்களின் கூட்டு வியாபார லக்ஷணம் தான் தெரியுமே! முதலியாருடன் கூட்டாக இருந்தவன் பெருந் தொகையுடன் வியாபாரச் சரக்குகள் வாங்கி வர லண்டனுக்குச் சென்றவன் வருஷங்கள் மூன்று ஆகியும் திரும்பவே யில்லை. லண்டனுக்குச் சென்று விலாஸம் தெரிவிப்பதாகச் சொன்னவன் அவ்விதம் செய்யவே யில்லை. அவன் சரக்குகள் வாங்க வேண்டியிருந்த கம்பெனிக்கு எழுதிக் கேட்டதில் அவன் வரவில்லையென்று பதில் கிடைத்தது. இன்னும் ஒரு வருஷமும் சென்றது. அவன் செய்தியே தெரியவில்லை. ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட ரொக்கத் தொகையை அவன் கொண்டுபோய் விட்டபிறகு வியாபாரம் நடப்பது எப்படி? முதலியார் தமது நாணயத்தைக் காண்பித்துப் பல இடங்களில் கடன் பெற்றுச் சரக்குகள் வாங்கி வியாபாரத்தை நடத்தினர். பட்ட காலிலேயே படும் என்பதற்கு இணங்க வியாபாரத்தில் கனத்த நஷ்டம் வந்துவிட்டது. ஆயினும் ஐயாயிரம் ரூபாய் இருந்தால் சமாளித்து விடலாம்.

***

என் செய்வதென்று யோசித்துக் கடைசியில் தன் தங்கைக்குக் கடிதம் எழுதினர். ஒரு வருஷத்தில் தொகையைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகத் தெரிவித்தார். தங்கையோ தத்தளிப்பான நிலைமையில் இருந்தாள். அவளுடைய செல்வம் யாவும் போய்விட்டது. அவளது பர்த்தா ஒரு தாசியின் வசப்பட்டு இருந்த சொத்துக்கள் அனைத்தையும் தொலைத்து விட்டார். அத்துடன் தேகம் மெலிந்து நோயும் பாயுமாகி விடவே, கை மூடிய கௌரவமாய்க் காலக்ஷேபம் நடந்துவந்தது. இதைத் தன் தமயனுக்குத் தெரிவிக்க விருப்பமில்லாமல், தற்சமயம் தனக்கு சக்தியில்லை யென்று மட்டும் சுருக்கமாய் எழுதித் தெரிவித்தாள். நீலமேக முதலியாருக்கு இக்கடிதத்தைக் காணவும், எவ்வளவோ செல்வவதியான தன் தங்கை இப்படி நன்றி கெட்டு வரைந்தாளல்லவா வென்று ஆத்திரம் பொங்கினர். இனி

தங்கையின் முகத்தில் விழிப்பதே யில்லையென்று தீர்மானம் செய்துகொண்டார். இருந்த கடன்களை ஒருவிதமாய் அடைத்துத் தமது வர்த்தக ஸ்தலத்தை மூடிவிட்டு மற்றோரிடத்தில் வேலைக்கு அமர்வதானார். இவ்விதமும் இரண்டொரு வருஷங்கள் சென்றன.

***

நீலமேக முதலியார் தமது குமாரனை சோமசுந்தரத்தைச் சென்னையில் சட்ட கலாசாலையில் பயிலுமாறு அனுப்பி வைத்தார். சோமசுந்தரம் சென்னைக்கு வந்ததும், தனது மனைவியைப் பார்த்து வரவேண்டுமென்று ஆவல் கொண்டான். தன் தந்தைக்கும் அத்தைக்கும் மனஸ்தாபமாயின், அதனால் தனக்கென்ன வென்று புறப்பட்டுத் திரிச்சிக்கு வந்து ஆண்டார் தெருவில் இருக்கும் தன் அத்தை வீட்டுக்குச் சென்றான். அங்கு அவர்கள் இல்லையென்றும், அவ்வீடு விற்கப்பட்டுப் பல வருஷங்கள் ஆயிற்றென்றும் தெரிந்து என் செய்வதென்று ஏங்கினான். இருந்த கேவலத்தைத் தெரிவிக்க மறைத்தே தன் அத்தை பொதுவில் தனக்கு சக்தியில்லை யென்று தன் தந்தைக்குக் கடிதம் எழுதியதாய் இப்போது அவனுக்கு விளங்கிற்று.

***

மிகுந்த விசாரத்துடன் திரிச்சியை ஒரு சுற்று சுற்றிக்கொண்டு பீரங்கிக் குளத்தின் பக்கமாய் வந்தான். அந்தச் சமயம் கனத்த மழை தொடங்கிக் கொண்டது. அவ்வழியில் இருந்த பெண் பாடசாலையில் வெளித் திண்ணையில் போய் உட்கார்ந்தான். அப்பொழுது ஐந்து மணியானதால் பள்ளிக்கூடம் விடப்பட்டு சிறுமிகளெல்லாம் வெளியில் வந்தனர். அவர்களில் ஒரு சிறுமியைச் சோமசுந்தரம் கண்டு பிரமித்தான். அவனுடைய அத்தையின் சாயல் அப் பெண்ணிடம் காணப்பட்டது. மெதுவாக அச் சிறுமியை யழைத்து அவள் எத்தனையாவது வகுப்பு என்றான். அதற்கு அச்சிறுமி ஐந்தாவது வகுப்பு என்றாள். அவளுடைய பெற்றோர்களின் பெயரைக் கேட்டதில் தன் அத்தையின் குமாரத்தியென்று நிச்சயமாயிற்று. அச்சிறுமி கிழிந்த பாவாடையையும், அழுக்கு படிந்த துண்டொன்றை மேல் தாவணியாகவும் தரித்திருந்தாள். கையில் கண்ணாடி வளையல்கள் கூட இல்லை. கழுத்தில் நான்கு அணா விலையுள்ள சிறு மணிகளை யணிந்திருந்தாள். அவளுடைய புஸ்தகங்கள் வெகு கேவலமாய்க் கிழிந்தும் பழமைப் பட்டும் இருந்தன. உடைந்த 'சிலேட்டு' ஒன்றும் அத்துடன் இருந்தது. ஏன் இப்படிப் புஸ்தகங்கள் இவ்வளவு பழயதாய் இருக்கின்றனவென்று சோமசுந்தரம் கேட்டான். புதுப் புஸ்தகங்கள் வாங்கத் தன் தாயிடம் காசில்லையென்றும், பழய விலையில் இப்புஸ்தகங்கள் வாங்கியதென்றும் சிறுமியான விசாலாக்ஷி தெரிவித்தாள். அவள் கையில் ஒரு அங்குலம் உயரமுள்ள சிலேட்டுப்பென்சில் ஒன்றும் இருந்தது. அதே அளவில் ஒரு காகித பென்ஸிலும் இருந்தது. இவற்றைக் கண்டு சோமசுந்தரம் கண்ணீர் விட்டான்.

***

விசாலாக்ஷி :—ஏன் ஐயா உங்கள் கண்ணிலே ஜலம் வருகிறது? எதற்காக நீங்கள் அழ வேண்டும்?

சோமசுந்தரம் :—உன் கிழிந்த பாவாடை தாவணியைப் பார்த்ததும் என் கண்களில் ஜலம் பெருகிற்று.

விசாலாக்ஷி :—நல்ல பாவாடைக்கு என் அம்மா எங்கே போவாள் ? என் அப்பா வீட்டில் எப்போதும் பாயிலேயே படுத்திருக்கிறார். என் அம்மா ஆப்பம் சுட்டு அதில் எல்லோரும் சாப்பிடுகிறோம். தீபாவளி வந்தால் புதுப் பாவாடை, தாவணி, பட்டாசு எல்லாம் கிடைக்கும்.

சோமசுந்தரம் :—என் கையில் இருக்கிற மோதிரத்தைப் பார்த்தாயா ? உனக்கு அது வேண்டுமா ?

விசாலாக்ஷி :—அதை வாங்க என் அம்மாவிடம் பணம் ஏது ? அது தங்க மோதிரமல்லவா ?

சோமசுந்தரம் :—பணம் வேண்டாம், நான் சும்மா கொடுக்கிறேன். உன் விரலில் போட்டால் மிகவும் அழகாயிருக்கும், சும்மா நான் தருகிறேன்.

விசாலாக்ஷி :—நான் அதைப் போட்டுக்கொண்டால் என் அம்மா என்னைத் திட்டுவாள். யார் எதைக் கொடுத்தாலும் வாங்காதே, தின்னாதே என்று என் அம்மா எனக்குச் சொல்லியிருக்கிறாள்.

சோமசுந்தரம் :—அது தங்க மோதிரமல்ல, பித்தளை மோதிரம். இப்போதுதான் புதியதாய்க் காலணுவுக்கு வாங்கியதால் அது தங்கம்போல பளபளவென்று மின்னுகிறது. உனக்கு விலை யில்லாமல் கொடுக்கிறேன்.

விசாலாக்ஷி :—சும்மா வேண்டாம். என் அம்மா திட்டுவாள். என்னிடம் காலணா இருக்கிறது, அதைக் கொடுக்கிறேன். நீங்கள் தருகிறீர்களா ?

சோமசுந்தரம் :—ஆகா, அப்படியே தருகிறேன் என்று மோதிரத்தைக் கழற்றி அவள் விரலில் இட்டு இப்போது உன் கை மிக்க அழகாய் இருக்கிறது என்றான். விசாலாக்ஷியும் தன்னிடம் இருந்த காலணாவை அவனிடம் கொடுத்துவிட்டுத் தன் மோதிர விரலைப் பார்த்துச் சந்தோஷம் கொண்டாள். இதற்குள் மழையும் நின்றுவிடவே, விசாலாக்ஷியும் சோமசுந்தரத்தினிடம் போய் வருகிறேன் என்று சொல்லிக்கொண்டு மற்ற சிறுமிகளுடன் தன் வீட்டை நோக்கிச் சென்றாள். சோமசுந்தரம் தூர இருந்தபடியே அவளைப் பின்பற்றிச் சென்று விசாலாக்ஷி உட்புகுந்த வீட்டின் அடையாளம் தெரிந்து கொண்டான். அது ஒரு கூரை வீடு ; மெதுவாக வீட்டிற்குள் எட்டிப் பார்த்தான். வெளியில் இருந்த உரலில் ஒரு பெண் ஆப்பத்திற்காக மாவு இடித்துக்கொண்டிருந்தாள். மிகவும் இளைத்து, அழகெல்லாம் மாறி, முகம் வாடி நின்ற அப்பெண்ணைப் பார்த்து, அவளே தன் அத்தையென்று தெரிந்துகொண்டான். ஓடிப்போய்த் தன் அத்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழலாமாவென்று ஆத்திரம் தோன்றிற்று.

***

சோமசுந்தரம் புத்திசாலியானதால் தன் ஆத்திரத்தை யடக்கிக் கொண்டான். தான் உட்புகுந்தால், தன்னால் அவர்களுக்கு வீண் செலவுகள் நேருமென்று யோசித்து, மௌனமாய் அவ்வீட்டைத் தாண்டிச் சென்று ரயில்வே ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தான். சென்னைக்கு வந்ததும், தான் கண்டவற்றைத் தன் தந்தைக்கு விஸ்தாரமாய் எழுதினான். பம்பாய்க்கு இவன் கடிதம் போய்ச் சேருகிற சமயத்தில் நீலமேக முதலியார் மிக்க ஆநந்தத்தோடும் வீற்றிருந்தார். லண்டனுக்குச் சென்று மறைந்த அவரது கூட்டாளி கொண்டுபோன பணத்துக்கு வாங்க வேண்டிய சரக்குகளுடன் திரும்பி வந்து விட்டான். லண்டனில் ஒரு சூதாட்டத்தில் மூவாயிரம்

ரூபாய் தோற்றுவிட்டதால், பாக்கிப் பணத்தைப் பாங்கியில் போட்டுவிட்டு, இந்த ஏழு வருஷ காலமாய் வேறிடத்தில் வேலைக்கு இருந்து, தொழில் நுட்பங்களையெல்லாம் கண்டுகொண்டு, காகிதம் செய்யும் தொழிலில் நன்கு தேர்ந்து, இழந்த மூவாயிரம் ரூபாயையும் மறுபடியும் சம்பாதித்துக் கொண்டான். காகிதம் செய்வதற்கான யந்திரங்கள் முதலியவற்றுடன் புது சரக்குகளோடும் பம்பாய் வந்து சேரவே நீலமேக முதலியார் ஆநந்தக் கடலில் ஆழ்ந்தினர். அந்த சமயத்தில் சோமசுந்தரத்தின் கடிதம் போகவும், தன் தங்கையின் சுருக்கமான கடிதத்தின் பொருளைத் தெரிந்துகொள்ளாமல் அவளைப் பகைத்ததற்காக வருந்தி அக்கடிதத்தைக் கூட்டாளிக்குக் காண்பித்தார்.

***

ஒருநாட் காலையில் எட்டுமணி யிருக்கும். விசாலாக்ஷி தான் பெற்றது பித்தளை மோதிரமல்லவென்றும், பவுன் மோதிரம் என்றும் தன் தாயாரால் தெரிந்துகொண்டு, அதைப் பிரியமாய்த் தந்த சோமசுந்தரத்தின் மீதே நினைவாக நின்றாள். தினமும் தன் தாய்க்குக் காண்பித்து மகிழ்வதுபோல் அன்றும் மோதிர விரலைக் காண்பித்துப் பூரித்தாள். அவள் தாய் எந்தப் புண்ணியவானோ உனக்குக் கொடுத்தான். அவன் நம்மை யறிந்தவனாகவே இருப்பான். அவனை எப்போது காணப் போகிறோம் என்று வருத்தமாய்ச் சொன்னாள். அந்த சமயம் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய வாலிபனின் கடியார கொலுசில் அவளுடைய காலணா தொங்கிக்கொண்டிருந்தது. மற்றொருவரும் அவ்வண்டியிலிருந்து இறங்கினார். விசாலாக்ஷி வாலிபனையும் தங்கக் கொலுசில் தன் காலணாவையும் கண்டுவிட்டு ஆநந்தத்துடன் உட்சென்று, அம்மா, பவுன் மோதிரம் தந்தவர் இதோ வருகிறார் என்று குதித்தாள். உடனே அவள் தாய் ஆச்சரியத்தோடு வெளியில் வரவும் நீலமேக முதலியார் தன் தங்கையைக் கட்டிக்கொண்டு கதறினர். சோமசுந்தரம் விசாலாக்ஷியின் பவுன் மோதிரத்தைக் கண்டு களிப்புற்று, க்ஷேமமா, என்றான். அடுத்த நிமிஷத்தில் விசாலாக்ஷிக்கு அவனே தன் கணவன் என்று தெரிந்துவிட்டது! விசாலாக்ஷியின் ஆநந்தப் பெருக்கை அளவிடவுங் கூடுமோ!

---

கிறிஸ்து மதத்திற் சேர்ந்த பிராமணர் அம் மதஸ்தர்களான கீழ் ஜாதியாரைச் சமையலறைக்குள் சேர்ப்பதில்லை. இதற்கென்ன காரணமென்று கேட்டால் நாங்கள் மதத்தை விட்டுவிட்டோமே யன்றி எங்கள் ஜாதியை விட்டுவிட வில்லை யென்பர். எப்போது ஒரு மதத்தைவிட்டு வேறொரு மதத்தைத் தழுவுகின்றனரோ அப்போதே தங்களின் முந்திய மதத்தினது கொள்கைகளையும் கைவிடுகின்றன றன்றோ? ஹிந்து மதத்தில் மதம் வேறு ஜாதி வேறு என்று இல்லை. ஆதலின் அம்மதத்திலிருந்து அன்னிய மதம் புகுவோர் தங்கள் ஜாதியையும் இழந்தவரே யாவர்.

---

தென்னாட்டில் சில பெரிய மனிதர்கள் நாயடிப்பவர்களைப்போல் குண்டாந் தடியைக் கையில் வைத்துக்கொண்டு வீதியை விலைக்கு வாங்கியதுபோல் வெகு உல்லாஸமாய்ப் போகிறார்கள். தடியைத் தூக்கித் திரிவது ஒருவித பெருமை யென்று நினைப்பது ஆச்சரியம். இந்தப் பெருமையை ஏற்கெனவே நாயடிக்கும் ஒட்டர்கள் வகித்திருக்கிறார்கள். நடக்க சக்தியற்ற வயோதிகர்களுக்குத் தடி வேண்டியது அவசியம். தேகத்தில் தக்க பலமுள்ளவர்களும் தடி தாங்குவது ஏனோ?

# கவிதா விலாஸம்

## ஒரு பண்டிதரின் எச்சரிக்கை

### —படியாத பாவை—

ஈசனார் படைப்பில் இவ்வுலகின்பம்
பாசமாய்ப் பிணிக்கும் பான்மையை யோர்ந்து,
இல்லற மொன்றே எப்பெருஞ் செயற்கும்
நல்லற மென்ற நன்னூல் மதித்து,
வாழ்க்கையாம் வண்டியை வழி பிசகாமல்
ஈர்க்கு மெருதுகள் இடக்குறில் வண்டியைக்
குடையெனக் கவிழ்த்துக் குறுமுட மாகி
அடைவினிற் றுன்பத் தாழ்வது கண்டு,
நன்மனை யொருத்தியை நான்மணம் புரிய
என்மனக் குறிப்பை என்னவர் தம்பால்
சொன்னே னவர்கள் சூழ்குலத் தெனக்கோர்
கன்னியைக் காட்டிக் கனிவுட னிவளே
புத்தியும் நடையும் புறமகத் தொளிருஞ்
சத்தியும் படைத்த சற்குணி, தமிழில்
கூடிய மட்டுங் கூட்டிப் படிக்கும்
வாடிக்கைப் பெண்ணென வழுத்தக் கேட்டு,
*உயிரும் உடம்பும் உதுவிரி பதமும்
பயின்றவர் தம்மைப் பாவல ராக்கல்
மிகுவெளி தென்று விதிமுறை வழியே
தகுமணம் புரிந்து, தனித்த பின்னொருநாள்,
படிப்பி னளவைப் பரிசோதிக்க,
குடக்குறி "கும்ப"மும் "கோண"மும் சேரில்
என்பெயர், எந்நகர்க் கிசைவென வினவினேன்;
அன்ப யான் 'அரி'-'வரி' யறியே னென்றாள் ;
ஐயகோ மோச மாகினே னென்று
பையவே பயிற்றப் பார்த்தேன், நாவில்
நுழையவே யில்லை ; நுண்ணறி விருந்தும்
பிழையினே னானேன் பிதற்றினேன் கலுழ்ந்தேன்.

---

* உயிரும்=உயிர் எழுத்துகளும், உடம்பும்=மெய்யெழுத்துகளும்.

***

இதந்தரு நூலோன் றெழுதிடு நேரம்
எதிரினிற் றோன்றி என்னவோ சொல்வாள்,
மருவிய யோசனை மறப்பதால் வாது
புரிவது சரியல போடிநீ யென்றால்,
குடுகுடு வெனப்போய்க் குழந்தையைத் தூக்கியென்
மடிமிசை வைத்து வாய்முணு முணுப்பாள்,
இன்னவோர் புத்தக மெடுத்துவா வென்பேன்,
சொன்ன அப்பெட்டியைத் தூக்கி முன்னிற்பாள்,
தவறிலா வுன்பெயர் ஜானகிதான், அது
எவர் பெயரெனிலென் இழவோ வென்பாள்,
அல்லும் பகலும் அறுபது நாழியும்
தொல்லையே அந்தோ சுகமொன் றில்லை!
நொடிக்கொரு சண்டை நொடிக்கொரு வம்பு,
படிப்பறியாத பாவையா லென்னே!
எத்தனை படித்தும் எத்தனை வரைந்தும்
அத்ததி *திருமணத் தவசரத் தாலே*
[1]பிழைத்தேன் வாழ்க்கையில பிடிப்பிலே னானேன்;
☞ தழைப்பவர் தமக்கேச் சரிக்கையு மிதுவே.

## உன் மனதிலேயே அடக்கு.

ஒருவர் உனக்கு எதிரிடையாக ஏதாவது செய்தால் உடனே உன் மனதில் தாங்கொணாத ஆத்திரம் உதிக்கின்றது; அவரைப்பற்றி எவ்வளவோ மனம் கோதிக்கிறாய். அந்தச் சமயம் மூன்றாவது வீட்டு முனிசாமி உன்னிடம் வந்து, 'என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாய்' என்கிறான். உடனே உனக்கு இடர் விளைத்த மனுஷ்யனைப்பற்றி அவனிடம் கண்டபடி தூற்றுகிறாய். அவன் அதைப் பத்திரமாய் முடிந்து கொண்டுபோய் உனக்கு இடர் விளைத்தவனிடம் தெரிவிக்க, அதிலிருந்து பெரிய கலக முண்டாகிறது. ஆதலின் உன் மனக் கோதிப்புச் சொற்களைப் பல்லைக் கடித்துக்கொண்டு உன்னுள்ளேயே அடக்கிவிடு. அப்போது உன் பிரியமான முனிசாமிக்கும் வேலை இல்லை. வீண் கலகமும் உண்டாகாது. ஒருவரைப்பற்றி ஒரு மனுஷ்யனிடம் தூஷிப்பதை விட ஒரு குட்டிச்சுவரிடம் சொல்வது மேல். அந்த சுவர் உன்னைபபற்றிப் பிறரிடம் போய் கோள் சொல்லாது.

---

[1] பிழைத்தேன் = தவறினேன்.

| | | |
|---|---|---|
| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | **விகடப் பிரதாபன்**<br>**(Registered.)** | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |

# எந்தப் பிழைப்பு தான் எற்றதுவோ?

## I.



அம்மா சோறு! அப்பா கஞ்சி!! அது தாண்டா காணும் மக்களா!!! ‘எல்லாம் இருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டியில்லை’ என்பதாக, இந்த நாகரீக நாளில் எதற்குத் தான் குறை விருக்கிறது? சிங்காரத்திற்குக் குறைவா? டம்பத்துக்குக் குறைவா? கைவீசி நடப்பதில் குறைவா? புதுபுது மோஸ்தராய் நகைகள் புறப்பட்டுக் கொண்டிருப்பதில் குறைவா? மோட்டார், நாடகம், சினிமா முதலியவைகளுக்குக் குறைவா? படிப்புக்குத் தான் குறைவா? தேசாபிமானிகளுக்குக் குறைவா? தேர்தல் பிரசாரங்களுக்குக் குறைவா? ராவ்பகதூர், திவான்பகதூர் பட்டங்களுக்குக் குறைவா? பகட்டுக்குக் குறைவா? இன்னும் நெடுக விகடன் அடுக்கிக் கொண்டு செல்லலாம். எதிலே குறைவு இருக்கிறது? பழய நாளில் பந்துக்கள், நண்பர்கள், வராமல் வந்தவர்கள் வீட்டுக்கு வந்து விட்டால், உள்ளங் குளிர்ந்து சமையற்கட்டிலே சட்டிப் பானையில் இருக்கும் பழய சாதத்தையும் உறியிலிருக்கும் ஆடைத் தயிரையும் கலந்து, ஜாடிக்குள்ளிருக்கும் ஊறுகாய்களோடு, கொல்லையிலிருக்கும் வாழை யிலையைப் பறித்து வந்து அதில் இட்டு வயிறார உண்ணச் செய்வது வழக்கமா யிருந்தது. எதுவும் வெளியிலிருந்து, கடையிலிருந்து, காசு தந்து வா வேண்டியதில்லை. எல்லாம் வீட்டுக்குள்ளேயே இருந்தது. இருந்ததை ஹிருதய மலர்ச்சியோடு இட்டு உபசரிக்க, வந்தவர்களும் பசி தீர வுண்டு, பலநாளும் தங்கிச் செல்வது பார்க்கப் பார்க்கப் பசந்தாகப் பரிமளித்தது. ஐயோ ஆண்டவனே! அந்த நல்ல காலம், வீட்டிலிருந்ததை யுண்டு மகிழ்ந்த காலம் மலையேறிப் போச்சுதப்பா! இப்போது எவராயினும் வீடுதேடி வந்தால் உடனே காபி எதிர் நிற்கிறது. உப்புமா உறுமிப் பார்க்கிறது. இதில் ஆகும் செலவுக்கு அன்னம்-அதுவும்

காய்கறிகளோடுங் கூடப் படைத்து விடலாம். நடு மத்தியானத்தில், கடும் வெயிலில் வருவோர்க்கும் காபி வேண்டி யிருக்கிறது. வேர்வை யோடு வேர்வையாய்க் காபி-டீ-யை வாயில் கொட்டிக் கொண்டு நாகரீக டம்பம் காட்டுகிறார்கள். இதற்கு மேலே பெண்களின் சங்கதி! இவ்வளவுக்கும் ஆகிற செலவுக்குப் பணம் எங்கிருந்தப்பா வருகிறது? ஐயோ! பாவம்! அதைத் தேடுவதில் வீட்டுக்காரன் படும்பாடு, திகைப்பு, தத்தளிப்பு, கண்ராவி - கண்விழி பிதுங்கிப் போகிறது! உத்தியோகம் அகப்பட்டவன் பாடு கொண்டாட்டமே. அது கிடைக்காமல் உயிர்ப் பிணமாய் அலையும் ஆண் மக்களின் கதி ஆண்டவனுக்கே அற்புதம்!

***

வெளியிலிருந்து நாலு காசு கொண்டு வருவது குதிரைக்கொம்பா யிருக்கிறது. எந்த வழியில் பிழைப்பு நடத்துவதென்பதே பெரிய விசாரமாய்ப் போச்சுது! ஆகவே, விகடனும் அந்த அங்கலாய்ப்புக்காரர்களுக்கு உதவியாக 'எந்தப் பிழைப்பு தான் ஏற்றதுவோ?' என்று ஆராய்வதற்கு என் அநுபவத்திலிருந்து கிண்டிக் கிளறத் தொடங்கிக் கொண்டேன். என் அதி விசித்திர விநோத விகட சபா ரஞ்சிதக் குட்டிகளே! நீங்கள் இதைச் சற்றுக் கேட்டுக் கொண்டு வாருங்கள்.

***

கேட்கிறீர்களா! எல்லாவற்றுக்கும் மேலான அர்தஸ்தும் ஏகபோகமுமான அரசனுடைய நிலைமையை ஆராயப் புகுந்தால், அவன் மன்னுயிரைத் தன்னுயிராய் நினைத்து, குடிகளுடைய சுகதுக்கங்களைத் தன்னுடையதாய்க் கருதி அவர்கள் மனம் வருந்தாமல் தரும பரிபாலனம் பண்ணுவானாகில் இதற்கு மிஞ்சிய நல்ல வேலை இல்லைதான். இதற்கு விரோதமாக இருப்பினோ இதைவிடக் கேடு கெட்ட பணி வேறெதுவும் கிடையாது. ருஷிய சக்கரவர்த்தி தன் குடும்பத்தோடு கைதியாய்ச் சுடப்பட்டுப் போனதையும், ஜர்மன் சக்கரவர்த்தி அரசு இழந்து தன் பூர்வ சொத்துக்களுக்கே திண்டாடுவதையும், இன்னும் இது போன்ற பலரின் பாடுகளையும் பார்த்தால் அரச வாழ்வு ஆபத்தான வாழ்வாகிறது. அரசனுக்குப் பிறகு இரண்டாவதா யிருக்கிற மந்திரி வேலையைச் சிலாகித்து, அது மகா சிரேஷ்டமானதும், எவரும் மெச்சும்படியானதும் தான் என்றாலும், இவன் தன் வயிறும், தன் பெண்டு பிள்ளை மக்கள் மனுஷாள் இஷ்டர்கள் வயிறும், நிரம்பினால் போதுமென்று அரசனுக்குத் தகுந்தாற் போலத் தலை யசைத்து, "ஊரைக் கொளுத்தும் ராஜாவுக்குக் கொள்ளிக் கட்டையைத் தூக்கிக் கொடுக்கும் மந்திரியாய்" "ராவணன் குடிக்கு மகோதரன் போல்" அநீதம் புரிய முற்படுவானாகில், இந்தச் சண்டாள வேலையைவிட மூன்றுங் கெட்ட வேலை எதுவும் இல்லை. இதைவிட்டுப் படைத் தலைவனுடைய வேலையைக் கவனிக்கப் புகில், இவன் வீரப்போர் செய்து அரசாங்கத்தை நிலைக்கச் செய்பவனாகையால் இவனுடைய வேலைக்கு மிஞ்சிய கீர்த்தியுள்ள வேலை எதுவும் இல்லைதான். ஆனால் இவனுக்கு இருக்கும் சத்துவ சாமர்த்திய வலுவால் அகங்காரங் கொண்டு அடித்தது ஆட்டம், கொண்டது கோலமென்று தன்னுடைய பேரும் பிரதாபமும் எங்கும் விளங்கி ஆரவாரமாய் இருக்க வேண்டுமென்று அத்து மீறி, வீராதி வீரனென்று பேர் எடுத்த "நெப்போலியன்" என்ற பிரஞ்சு சக்ரவர்த்தியைப் போல்

வரம்பு கடக்க எண்ணுவானாகில், "எளியாரை வலியார் அடித்தால், வலியாரைத் தெய்வம் அடிக்கும்" என்பதாய், அடாது செய்து படாதும் பட்ட இராவணன் போலும், பேராசை கொண்ட துரியோதனன் போலும் இருந்த இடம் தெரியாது அதோ கதியாய் ஒன்றும் இல்லாது போகும்படி தெய்வம் செய்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. அன்றியும் இராணுவ சேவகத்திற்கு வீட்டிலே சாவு என்பது ஒரு நிச்சயத்தியில்லை. "காடோ, செடியோ, கடற்புறமோ, கனமே மிகுந்த நாடோ, நகரோ, நகர் நடுவோ, நலமே செறிந்த வீடோ, புறந் திண்ணையோ"—எந்த இடத்தில் எந்தக் குண்டுபட்டுக் கண் மூடவேண்டுமோ கர்த்தாவுக்கே தெரியும். அப்பொழுது இதைவிடக் கடை கெட்டது எதுவுமில்லை யென்னும்படியாய் விடுகிறது.

***

இனி, இவைகளுக் கெல்லாம் மேலான நியாயாதிபதி யென்னும் 'ஜட்ஜ்' வேலையோ, அது இகபர சுகிர்தமுள்ளது. இதைவிட மேலான வேலை எதுவும் இல்லை. இப்படிப் பட்ட ஸ்தானத்தில் உட்காரக் கொடுத்து வைத்த புண்ணியவான் தன்னுடையவும் தன்னின பந்துக்களுடையவும் சுக சௌக்கியத்துக்காகவே தனக்கு இப்பதவி கிடைத்ததென நெறி தவறி லஞ்சம் முதலியதுக்கு ஆசைப்பட்டு, பந்து மித்திரர்களுடைய அன்பு - தயை - தாக்ஷண்யத்தின் மயக்கத்திற்குட்பட்டு அநியாயம் செய்தாலும், "பாப்பாத்தியம்மா மாடு வந்தது பார்த்துக் கொள்" என்பதாய், "மாடு மேய்த்தேன் கோலை யெறிந்தேன்" என்று, எப்படியோ வேலையாக வேண்டியது ஒன்றே கடமையென்று சோம்பல் மூற்றி, உண்மையைக் கண்டு பிடிக்கச் சிரத்தை யில்லாமல், வாதி-பிரதிவாதிகளின் வக்கீல்கள் சொல்லுவதினாலேயே வழக்கின் சாராம்ஸத்தை யறிந்து ஒத்தை இரட்டைப் பிடிப்பதாய் அவசரப்பட்டு அநீதியான தீர்மானம் செய்தாலும் ரௌரவாதி நரகத்துக்குப் பாத்திரனாகிறான். ஆகையால் "கரணம் தப்பினால் மரணம்" என்னும்படியான இந்த வேலையை ஏற்றுக் கொள்ள உத்தம மனஸாக்ஷி யுடையவர்கள் நடுங்க வேண்டியதா யிருக்கிறது. இவர்களுக்கு உதவி புரிபவர்களாகிய வக்கீல்கள் நியாயத்தை யாராய்ந்து எடுத்துக் காட்டி, கண்ணில்லாதவர்களுக்குக் கண் கொடுப்பதுபோல ஸகாயம் புரிவதினாலேயே நியாயவாதிகளென்ற காரணப் பெயர் பூண்டிருப்பவர்கள். இவர்களின் உத்தம ஊழியமும் உபகாரமும் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்குச் சஞ்சீவி மருந்து போலாகி, சத்தியத்துக்கு வெற்றியும் தர்மத்திற்கு வாழ்வும் தந்து பெரிய கால சகாயமாய் முடிகிறது. ஊர் வழக்கைத் தன் வழக்காக எண்ணி நடத்தும் உயர்ந்த குணம் இந்த வக்கீல் வேலையில் இருக்கிறது. சிலாக்கினைக்கும் ஏற்றதுதான். ஆனால், நியாயவாதி யென்ற பெயருக்கு மாறாக அநியாயவாதிகளாகி, ஒருவனிடம் துட்டைத் தட்டிக் கொண்ட காரணத்தினாலேயே பொய்-புளுகு-சிருஷ்டனை முதலிய பஞ்சமா பாதகங்களையும் செய்வது பாதகமில்லையென்று தாங்களே தனியாக ஒரு தர்ம சாஸ்திரம் ஏற்படுத்திக்கொண்டு மெய்யைப் பொய்யாக்கி, உண்மையைச் சொல்லுஞ் சாக்ஷியை யுருட்டிப் புரட்டி எண்ணெய்ச் சட்டியில் போட்ட பணியாரம்போல் துள்ளிக் குதித்துத் தொப்பென்று விழுந்து தொண்

டையைக் கிழித்துக்கொண்டு, ஆட்டத்தில் வேஷம் போட்ட டம்பாச்சாரிபோல் நடனங்கள் செய்து வியவகாரத்தின் உண்மையை நியாயாதிபதி கண்டு பிடிக்க விடாது மலேக்கச் செய்வதும், அல்லது உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் உதவாக்கரை சண்டாளர்கள்போல் ஒரு கட்சியில் வாங்கி மறு கட்சியில் கை நீட்டுபவர்களும் இந்த உத்தம வேலையைப் பாழாக்குவதால் அப்பப்பா இந்த வேலை யுதவவே உதவாதென்று ஒதுக்கவேண்டி வருகின்றது. அன்றியும் ஊரெங்குமே வக்கீல்கள் மிகுந்துவிட்டதனுல் வரவு சூன்யமாகி, படாடோபமும் மேல் செலவுகளுமே அதிகமாகிவிட்டதில், இந்த வேலையில் லாபம் பழய நாள்போல் வாரிக்கொட்ட வழி யில்லாமலிருக்கிறது. ஆகவே, இதையும் தள்ளத்தான் நேருகிறது. அவ்வளவு உயரத்துக்கு நீண்டு பி. எல். பட்டம்பெறப் பணத்திற்கும் திண்டாட்டமானதால் எல்லோருக்கும் இது பொருந்தக் கூடிய வேலையுமல்ல.

***

இதையும் தள்ளி, ஊராருடைய சொத்தையும் மானத்தையும் காப்பாற்றிக் கொடுக்கும் போலீஸ் வேலையைச் செய்து அதிகாரமும் சிறப்புமாக எல்லோரும் போற்றும்படி, பேர் எடுப்போமென்ருலோ, பூரண வாலிபம் நிறைந்த யௌவன புருஷன் முன்பு—லாவண்ய ரூபியான ஒரு மோகனங்கியை உட்கார வைத்து சும்மாயிருவென்று சோதனை செய்வதுபோல, ஏராளமான அதிகாரங்களைத் தனக்குள் பெற்றுக் கொண்டு சும்மா அடங்கியிருக்கும்படி செய்வதால், அது மகா கஷ்டமுள்ளதாகி சாமான்யமாய் மனிதனுக்குள்ள பொறுமை - சாந்தத்வம்-தயாளம்-இவைகளை மறக்கடிப்பதால் இவ்வேலையும் சிலாக்கினைக்குரியதாய் தர்மத்துக்கு இசைந்ததா யில்லை. ஜனங்களுக்கும் இவர்களோடு உறவாட உள்ளுக்குள் அச்சம். இவர்களுக்கும் ஜனங்களுடன் பழகி அன்பும் இரக்கமும் ஆதரவுமாய்ப் போவது அநேக சமயங்களில் கூடாததாகிறது. அந்த வேலையின் போக்கே அப்படியாகிறது. யாவரும் மெய் மறந்து உறங்கும் நடு நிசி வேளையில் கண்விழித்து ஊரைச் சுற்றி வந்து பனியில் நனைகிற போலீஸாரிடத்தில் எவர்கள் அனுதாபப்படுகிருர்கள்? மேலும் பலருடைய சாபங்களையும் சுமந்து தாங்க வேண்டியதாகி, அது குடும்பத்தைச் சுற்ருதிருக்கவும் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே, பெருத்த சோதனையான இதை ஒதுக்கி, பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டில் (காட்டு இலாக்காவில்) வேலை செய்யலாமென்ருலோ, அங்கும் சங்கடங்களே சூழ்கின்றன. காடு அழியாது கவர்ன்மெண்டார் காவல் வைத்தால் குடிகளுடைய சாபனைக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. விவசாயிகளின் ஆடு மாடுகள் காலார மேய்ந்து திரியத் தடையாகிறது. இதில் வருகிற ஆசீர்வாதங்களோ ஆண்டவன் வரைக்கும் எட்டிப் போகின்றன!

***

இதையும் விட்டு ஆப்காரி டிபார்ட்மெண்ட் என்கிற கள்ளு-சாராயம்-கஞ்சா-அபின்-உப்பு முதலியவைகளைக் காபந்து செய்யும் வேலையில் பிரவேசித்தாலோ, அந்தந்தவற்றிலெல்லாம் வாயை வைத்து பழக்கம் மிகுந்துபோய்க் கனத்த குடியராகி வீட்டில் பெண்டு பிள்ளை பட்டினி கிடந்து சபிக்குஞ் சாபனைக்குள்ளாக வேண்டியதுதான். இவ்வளவையும் விட்டு ரயில் வேலைக்குப் போகலாமென்ருலோ, அதற்

குள்ள பரீக்ஷையில் தேற வேண்டிய தோடு, தேர்ந்தாலும் தேர்ந்த ஜாப்தாவின் வரிசைப்படியாய் வேலைக்கு அழைப்பதற்குள் பல வருடங்கள் கழிந்துபோய், வயது அதிகரித்தாலும் வேலையை விட்டுவிடு, வருஷ ஊழியம் (ஸர்விஸ்) அதிகரித்தாலும் உடனே விலகிவிடு என்பதான நிர்ப்பந்தத்திற்குள்ளாய், வேலை கிடைத்தாலும் சட்டிப்பானை பெண்டுபிள்ளைகளையெல்லாம் தூக்கிக்கொண்டு பல இடங்களுக்கும் மாறி மாறிப்போய் அலைய வேண்டியிருக்கிறது. அன்றியும் இரவு பகல் கண் விழிப்பதில் சற்று அயர்ந்தாலோ வண்டிகள் மோதிக்கொண்டு விசாரணைக் கைதியாகி வாழ்வும் பறந்து விடுகிறது. வேலை கிடைப்பதுமில்லை-கிடைத்த வேலையும் பெருந் தொல்லையாகி, அந்த வேலைக்கு ஆயிரம் மனுக்கள் வந்து குவிவதிலே அதிர்ஷ்டமுள்ளவனுக்கு 'லாட்டரி'ச் சீட்டு என்பதாய் அதுவும் ஒரு நிச்சயப்பாடு இல்லாததாய் இருப்பதால் இதில் ஒரு உறுதி-பிடிமானத்தைக் காண முடியவில்லை. இனி, இதையும் துறந்து கஷ்டப்பட்டுக் கல்வியைப் பூரணமாய்க் கற்றுக் கவி பாடி வித்வானெனப் பேரெடுக்கலாமென்றாலோ, இதிலுள்ள கண்ராவிக் கோலத்தை விவரிப்பதற்கு - விஷயமும் வெகு தூரத்துக்கு இழுத்துக்கொண்டு போகலாமானதால், இதையும் இன்னும் பின்னுமுள்ள மற்றவைகளையும் விகடன் அடுத்த தடவைக்கு வைத்துக்கொண்டு, இவ்வளவோடு கப்சுப் என்று என் ஆராய்ச்சிக் கடையை கட்டி வைத்துவிடுகிறேன். நீங்களும் இந்தத் தடவைக்குக் கிடைத்த வரையிலுள்ள அன்னக்காவடிக் கதையை அலசிப் பார்த்துக்கொண்டிருங்கள். ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

---

## தீபாவளி வரை பொறு.

---

மனைவி:—எத்தனை நாளைக்கு இந்தக் கந்தல் துணியைக் கட்டியழுவது? ஒரே சேலையைத் தினமும் துவைத்துத் துவைத்துக் கட்டிக் கையெல்லாம் நோகிறது. இவ்வளவு பணம் செலவாகிறதே. ஒரு சேலைக்குத் தானா பணம் பஞ்சமாய்ப் போச்சுது?

புருஷன்:—போதும் போதும். உன் புராணத்தை நிறுத்து. காலையில் சண்டை வேண்டாம். தீபாவளி வரை பொறு. எப்படியும் வாங்கிக் கொடுக்கிறேன். நாள்தோறும் இப்படி என்னைப் பிடிங்கித் தின்னாதே. எனக்குள்ள பணக் கஷ்டம் உனக்குத் தெரியுமா?

# பெண்கள் பக்கம்

## I

"இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" பத்திரிகையில் ஸ்ரீமான் நந்த கோபால்வர்மா, பி. எஸ். ஸி. பின்வருமாறு எழுதுகிறார்:—"மனித சிருஷ்டியில் நாஸூக்கான அம்சமாகிய ஸ்திரீகள், ஆண்மக்களுக்கு ஓர் ஆறுதலும் சந்தோஷமும் சுகமும் அளிக்கப் பிறந்தவர்கள்; வாழ்வில் ஸகஜமாக அவதிப்படும் மனிதர்களுக்கு உற்ற தோழர்களாக ஸ்திரீகள் விளங்குகின்றனர். ஸ்திரீதான் வீட்டுக்கு லட்சுமி. அவளில்லாமல் உற்சாகமில்லை; அவளில்லாவிடில் மனதுக்குச் சாந்தியில்லை; அன்பு, காருண்யம் என்பதில்லை. உலகமெங்குமே இரக்கம், அன்பு முதலிய உயர்ந்த குணங்கள் ஸ்திரீகளுக்கு அதிகமாகவுண்டு. இந்திய ஸ்திரீகள் பாதிவரத்யத்திற்கும், தெய்வ பக்திக்கும், பதி பக்திக்கும் பெயர் போனவர்கள்; மகா பரிசுத்தர்கள். உலக சரித்திரத்திலே உண்மைக் காதலின் நிமித்தம், பதி பக்தியின் நிமித்தம், சந்தோஷமாக உயிரை நீத்த உத்தமிகளுக்கு இந்தியா பெயர் போனது. உலகமழிந்தாலும் அவ்வுத்தமிகளின் பெயர் அழியாது. பல ராஜ குடும்பத்து மாதரசிகள் உயிரைத் திரணமாக நினைத்து, தங்கள் மானமே பெரிதென்று எண்ணிக் கருமம் ஆற்றியிருக்கிறார்கள். இந்துதேச சரித்திரத்தில் இப்படிப்பட்ட ஸ்திரீ ரத்னங்கள் அனந்தம். குபேர ஸம்பத்துடன் கூடிய ஒரு பத்மினியும், ஸர்தார்பாயும் பதிபக்தி காரணமாகச் சத்துருக்களை எதிர்த்துத் தீரமாகச் சண்டையிடவில்லையா? நமது நாட்டு வீர மாதர்களின் நினைவு வரும்போது, சரீரம் உண்மையில் புளகாங்கிதமாகிறது. இந்தச் சரீரம் கேவலம் உடம்புக்குப் போர்த்திக் கிழிந்துபோன ஒரு கந்தைக்குச் சமானம் என்று மதித்துத் தங்கள் கற்பையும், கௌரவத்தையும் காத்துக்கொண்ட பெண்மணிகள் எத்தனை பேர்!"

## II

துருக்கி தேசத்தில் பெண்களின் நிலைமை பேதமடைந்து வருகின்றது. தங்களின் புராதன நாகரீகத்தையே முற்றிலும் களைந்து அதன் ஸமாதியில் மேல்நாட்டு நாகரீகக் கொடியை ஏற்ற முயற்சிக்கின்றனர். ஐரோப்பியர் எத்தனையோ தேசங்களில் ஸஞ்சரித்தபோதிலும் தங்கள் தேச நாகரீகத்தையும் நடை, உடை, பாவனைகளையும் மாற்றிக்கொள்ள விரும்பாதது குறிப்பிடத் தக்கது. லண்டன்மா நகரைப் பார்க்க வந்த துருக்கியப் பெண்ணொருவள் பின்வருமாறு கூறினாள்:—

"துருக்கியில் நாங்கள் அனைவரும் கூந்தலைக் கத்தரித்துக்கொள்கிறோம். தற்போது ஆங்கிலேய ஸ்திரீகளின் மாதிரியில் வாழ்ந்து வாழ்க்கை இன்பங்களை அனுபவித்து வருகின்றோம். நாங்கள் சுருட்டை உபயோகிக்கிறோம். சில சமயங்களில் எங்கள் கணவன்மாரின்றித் தனியே பிரயாணஞ் செய்கிறோம். அந்தப்புரங்கள் என்பதே எங்கள் நாட்டை விட்டுப் போய்விட்டன. ஒவ்வொரு நாளிலும் நாங்கள் கப்பலில் சமுதாய நர்த்தனத்தில் ஈடுபடுகிறோம்."

பாரத நாட்டுப் பாவைமார் மேனாட்டுப் புதுமோகத்தில் தங்களின் இச்சையைச் செலுத்தாமல், தமது புராதன நாகரீகத்தைக் காப்பதிலேயே திருஷ்டியுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

## III

ஸ்ரீமதி ஸரோஜினிதேவியின் வாக்கு :—"இந்தியாவில் ஸ்திரீகளிடத்தில் உண்மை மதிப்பு இன்னும் உயிருடன் இருந்து வருவது என்னுடைய பொதுவாழ்க்கையில் நான் கண்ட ஒரு ஸந்தோஷமான விஷயமாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் நமது நாகரீகத்திற்கு மூலஸ்தானமாக இருந்த இந்த கௌரவம் இன்றும் அவ்வாறே இந்தியாவின் ஹிருதயத்திலிருந்து வருகிறது."

## IV

"இந்துசாதனம்" பத்திரிகையில் ஒரு பெண்மணி பின்வருமாறு எழுதுகின்றார் :—"நமது பெண்ணுலகத்தில் கல்வி நிலையானது மிகக் குறைவுடையதா யிருக்கின்றது. ஆகவே கற்ற ஒரு சில பெண்மக்கள் ஆங்காங்கே சங்கங்களை ஸ்தாபித்துக் கல்வியறிவில்லாதார்க்குக் கேள்வி யறிவைக் கொடுத்து அவர்களை முன்னேற்றமடையச் செய்தல்வேண்டும். தேசம் உயர் நிலை அடைதற்கு முதற்காரணமாயுள்ளவர் பெண்களே. இவர்களிடத்தில் அன்பு நெறியும் அற நெறியுந் தழைத்தோங்கி மேன்மை பெற்று வருமானால், நமது தேசம் உயர்ந்த நிலைமையுடையதாக விருத்தற்குப் பிறிதொரு செயலும் வேண்டுமோ! பெண்கள் கல்வியினாலும் கேள்வியினாலுஞ் சிறந்து முன்னேற்ற மடைவதற்காக அமைக்கப்படும் சங்கங்களைப் பெண்பாலாரே நிர்வகித்து வருதல்வேண்டும். ஆனாலும், தனி வழிச்சேறலும் பிறவும் பெண்மைக் குணத்துக்கு மாறுபட்டனவாயிருத்தலினால், பெண்கள் சங்கத்துக்கு ஆடவர்களுடைய உதவியு மின்றியமையாததொன்றே. சங்கங்களிற் கற்றவர்களே அன்றிக் கல்வியில்லாரும் சேர்ந்திருத்தல் வேண்டும். கல்வியுடையார் ஒருவரோடொருவர் சேர்ந்து தம்மை மாத்திரம் திருத்திக்கொள்வதால் தேசத்திற்குப் பெரும்பயன் விளையமாட்டாது. ஆதலால் கல்வியில்லாதவரும் கேள்வி யுணர்ச்சியால் தம்மைத் திருத்தஞ் செய்தற்கேற்ற துறையிற் சங்கங்கள் முயன்று வருதல்வேண்டும். அறிஞர்களால் சமயாசாரம், சாதியாசாரம் முதலான ஒழுக்க நெறிகளை வளர்க்கக் கூடிய சொற்பொழிவுகள் சங்கச் சார்பாக அடிக்கடி நிகழ்த்தப் பெறுதல்வேண்டும்.

இன்னோரன்ன செவ்விய முறைகளை யநுசரித்து ஆங்காங்கே மாதர் சங்கங்கள் ஏற்பட்டு முயற்சித்துவருமாயின், நமது சமூகம் தனது பண்டைப் பெருமையைப் பெற்றுக் கொள்ளுமென்பதில் ஐயமில்லை."

## V

வெகு தினங்களாகக் கைநோக, எழுத்தாணி கூர் மழுங்க எழுதி வைத்த புண்ணிய புருஷர்களின் அருமையை யறியாமல், கட்டையிலே போகிற கிழப் பிணம் இத்தனை ஓலைக் கட்டுகளையும் வீடெல்லாம் இடமடைத்துக்கொள்ள வைத்துச்சென்றது ; ஒருநாளைய வென்னீர் அடுப்புக்காயிற்றென்று தூற்றி நெருப்பிற் போடும் அவித்தியாவந்தைகளான பெண்கள் எத்தனை பேர்? பாஷா ஞானமில்லாமற் போனதால் அவர்களுக்கு ஸத்கிரந்தங்கள் சத்துருக்களாயின. இனியேனும் இந்த அஞ்ஞானத்தைத் திருத்துவது நமது கடமையன்றோ ?

நீதி வெண்பாக்களில் அநேகம், மாதர்களை நோக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. 'கனங்குழாய்' என்று வெண்பாவில் வந்திருப்பதால் மாதர்கள் முற்காலத்தில் வித்தை பயின்றிருந்தனரென்றும், அவர்கட்கு மேற்கண்ட வெண்பாக்களின் மூலம் நீதியைக் கற்பிக்கும்படி பாடப்பட்டன வென்றும் ஸ்பஷ்டமாகிறது. எனவே நமது பெண்மக்கள் பூர்வத்தில் கலாவதிகளாய்ப் பிரகாசித்தனர் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமாகும்.

## VI

மேனாட்டு ஸ்திரீகளின் ஆசாரத்தை இக்காலத்து நாகரீகர் தங்களின் மாதர்களுக்குக் கற்பித்து, ஸம ஆஸனத்தில் உட்கார்ந்து பெரியோர்களை அவமதித்துக் குதர்க்கம் செய்து பாப மூட்டையைச் சுமக்கும்படி பண்ணி, தங்களுக்கு வேண்டிய கஷ்டங்களைத் தாங்களே தேடிக் கொள்கின்றனர். ஐரோப்பிய ஸ்திரீகளிடமுள்ள நற்குணங்களை மட்டும் நம் ஹிந்து மாதர்களிற் பலர் பின்பற்றுவதில்லை. கல்வியும் இல்லை. இருப்பதிலும் கர்வசிந்தை மிகுதி. இத்துடன் மேனாட்டுப் பெண்களைப் போல் தாங்களும் நடக்கத் துணிந்து துராசாரிகளாகின்றனர். இவ்வித கல்வியைத் தான் இக்காலத்தார் தங்கள் ஸ்திரீகளுக்குக் கற்பிக்கின்றனர். ஐயோ! இதைவிட வேறு தீமை ஏது? இந்தியாவுக்கு மகத்தான கஷ்டமுண்டாக வேண்டுமானால் இக்காலத்தார் ஸ்திரீகளுக்குக் கற்பிக்கும் அசட்டுக் கல்வியே போதுமானது.

## VII

கல்வி கற்ற குணவதிகளான ஸ்திரீகளின் தற்கால நிலைமை மிகவும் பரிதபிக்கக் கூடியது. அவர்களில் சிலருக்கே உத்தமமான பதிகள் வாய்த்திருக்கக் கூடும். மாமியின் கொடுமை இன்னும் தீரவில்லை. கோள் சொல்வோர் அடங்கவில்லை.

***

ஒவ்வொரு தாயாரும் தன் குமாரத்திக்குப் பின் வருமாறு நற்புத்தி போதிக்கவேண்டும் :—

"என்னையாவது ஸகோதர மித்திர பந்து வர்க்கங்களையாவது நினையாதே. உன் பர்த்தாவே உனக்குப் பிரதானன். பரபுருஷர்களை மனதில் ஸ்மரியாதே. பொறுமையே பூஷணம். தனியே ஓரிடத்துக்கும் செல்லாதே. தாய் வீடென்பதை மறந்துவிடு. வெகு தூரதேசத்தை நாம் எப்படிக் காணமுடியாதோ அதுபோல மாதாவின் கிருகத்தை மனதில் கருதாதே. பதிபாத பூஜையே பரலோக மார்க்கத்தைக் காட்டும். ஸந்தான ஸம்பத்துக்களோடு நாங்கள் வாழ்வதெல்லாம் பதிஸேவகத்தினால் கிடைத்தவை. நீயும் அவ்விதமே இருக்கவேண்டும். உன் பர்த்தாவின் மனமகிழ நீ பரம சாந்தையாய் ஹிதகரமாய் நடந்துகொண்டு புகழுடம்பு எடுத்து உன்னைப் பெற்ற எங்களுக்கும் ஸத்கீர்த்தியைத் தரவேண்டும். உலகத்தில் ஞானமார்க்கத்தைப் பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஸ்திரீ ஜாதியாராகிய நமக்கு நமது பர்த்தாவிடம் பரம பக்தைகளாய் நடந்துகொள்வதிலிருந்தே எல்லா ஞானமும் சுலபத்தில் சித்தித்துவிடக் கூடும். வீட்டில்

கணவனை எதிர்த்துக்கொண்டு தேவாலயத்தில் பகவானைத் தரிசிக்கச் செல்லும் பெண் வழி தெரியாத கபோதியாவாள். உனக்கு உனது கணவனே ஸகலமுமாகும். உன் பர்த்தாவைக் காட்டிலும் உன் நகைகள் பிரகாச முடையதல்ல. உனக்கு உண்மையான பிரகாசமும் வதன காந்தியும் தரும் ஞானதீபம் உன் பதியே யாவர்''—என்று போதித்து நல்வழிப்படுத்த வேண்டும்.

---

## அற்ப விஷயத்தில் பொய் ஏனோ?

பெண்மணியே! முதலில் நீ அந்தப் பணம் பக்கத்து வீட்டுப் பெண் கொடுத்து வைத்ததென்றாய், பிறகோ தாய் தந்ததென்றாய். அப்பால் ஒவ்வொரு காலணாவாகச் சேர்த்தது என்கிறாய். ஒரு நிமிஷத்துக்குள் ஒரு அல்ப சங்கதியில் எவ்வளவு பொய் மொழிகளைக் கொட்டிவிட்டாய். உன் பர்த்தா இனி உன் வார்த்தையை எப்படி நம்புவார்? இன்னும் நீ "அப்படிச் சொன்னாலென்ன, என்ன பிரமாதமான பொய் சொல்லிவிட்டது" என்கிறாய். ஐயோ! உன் அறியாமையை நான் என்னென்று சொல்ல? இனியாவது உன் கணவனுக்கு யதார்த்தமானவளாக நட. அவருக்குத் தெரியாமல் எதிலும் நீ சம்பந்தப்படாதே.

ஆரிய ஸமாஜம் விதந்துகளுக்கு மறுவிவாகம் கூடாதென்கிறது. விதந்துவைப்போல் பத்நியை இழந்த பூமானும் மறுவிவாகம் செய்துகொள்ளாமல் காலம் கழிப்பது உத்தமம் என்று சொல்லுகிறது. 55 வயதுவரை பிரம்மசாரிகளாய் இருந்தால் இந்தியா நன்மையடையு மென்றும், குருகுல வாஸம் செய்யாமல் கிருகஸ்தாச்ரமத்தை யடைவது தகாதென்றும் அந்த ஸமாஜத்தை ஸ்தாபித்த ரிஷி வியக்தமாய்க் கூறியிருக்கிறார். சூத்திரர் மட்டுமே மனைவி இறந்தால் மறுவிவாகம் செய்துகொள்ளலா மென்கிறார்.

---

மனதுக்கு ஒருவித சாந்தி ஏற்படவேண்டி முன்னோர்களாகிய விவேகிகள் அவ்வக்காலத்துக்கும் தேசத்துக்கும் ஜனங்களின் புத்தி நிலைமைக்கும் தக்கபடி பற்பல மதங்களை உண்டாக்கி யிருக்கிறார்கள். தன்னை யீன்ற மாதாவை இகழ்ந்தோனும், தான் பயின்ற கல்விச்சாலையில் அபிமான மில்லாதவனும், தன்னுடைய மதம், தன்னுடைய பாஷை, தன்னுடைய ஜாதி, தன் சுற்றத்தார், தன்நேயர், தன்மானம், தன்தேசம், தான் வழிபடும் கடவுள் ஆகிய இவற்றைப் போற்றாமல் அலக்ஷியம் செய்வோனும் விவேகியென் றெண்ணப்படான்.



# ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்

[ஸ்ரீமான் T. பக்தவத்ஸலம் பி. ஏ., அவர்களின்
பாச்சுவை பரவிய நடை.]

நல்லவர்க்கெல்லாம் நடு நாயகமான வல்லவ னொருவ னிருக்கின்றனன்! அவன் ஆளுக்கேற்றது போலும் வேளைக் கிசைந்தது போலும் வேடம்போடும் நாடகக்காரனாயினும், கெட்ட தொன்றும் பொட்டென விளைப்பதில்லை. ஆன்மாக்கள் உய்து ஆனந்த மடைவதே, என்றும் அவனுக்கு நன்றாகிறது. அவரவர்கள் நிலைமைக்கேற்கத் தலைமை பூண்டு, அற்புதம் புரியும் பொறற்பினன். அவன் மீனாய்த் தோன்றி மிடுக்கொழித்தா னொரு தரம்! கூர்மமாகி ஆர்வம் விளைத்தான் ஒருதரம்! பன்றியாய்ப் பாரிடந்து நன்றே விளைத்தான் பிறிதொரு தடவை! பின்னர் அவனே மன்னிய சிங்கமும் மனிதனுமாகி, சிறியனைக் காத்துக் கொடியனைக் கொன்றான்! வாமனனாகிப் பூமியும் வானும் புகழ் பெற அளந்தான்! பரசுராமனாய்ப் பிறகு அரச ராம னாயினன்.

***

இப்பொழுது ஒருநாள் அர்த்த ராத்திரி யாய்விட்டது! இரவினா லுண்டாகும் இருள் போதாது, மேகமும் மழையும் மின்னலும் இடியும் காணப்பட்டதால், இருளுடன் மருளும் இணையாய்த் தோன்றின. இவ் அகாத வேளையில் தகாத கோலம் பூண்டு, சுத்த சத்துவ ராகும் நற்றவ ரொருவர், சற்று முன் சனித்த சித்திரக் குழந்தை யொன்றைக் கைத்தலத் தேந்தி அயலார்க்குத் தெரியாமல் வெளியே செல்ல முயலாது முயலுகின்றார்! அவரிருந்த இடமோ அரணும் அரங்கமும், கோட்டையும் கொத்தளமும், காவலாளரும் ஏவலாளரும் சுற்றிலும் நின்று முற்றிலும் காத்த கொற்றவர் மாளிகையா யிருந்தது! இவைகளைக் கடந்து எப்படிச் செல்வ தென்று இல்லாத தெல்லாம் எண்ணி யெண்ணி இப்பெரியவர் ஏங்குகின்றார்! வாட்ட மென்பதே இவர் நாட்டந் தன்னில் ஓட்டம்பெற் றிருந்தது! தேகம் வன்மையுற்றதாயினும் தாகம் ஏதோ இவர் மனதைத் தவிக்கச் செய்ததால் ஏகமாய் இளைத்துக் காட்டிற்று. காலிலே விலங்கும், கதவிலே தாழும்! சுற்றியும் காவல் மெத்தவும் தொந்தரை! இத்தனையும் தாண்டி எப்படிச் செல்வார் வெளியில்? இவ்வெண்ணம் எண்ணியும் எண்ணாததற்கு முன், காலின் விலங்கும் நாலாய் ஒடிந்தது! கதவின் தாளும்

அதமாய்ப் போயிற்று! ஊக்கங் கொண்ட காவலாளர் ஏக்கம் பெரிதாய் நோக்கம் நீங்கித் தூக்கம் தாங்கினர்! இது தான் சமய மென்று, மெல்லப் புறப்பட்டார் நல்லவரும்! வெளியில் வந்தார், ஒளியும் கண்டார்! இருட்டையும் நோக்காது, பயமுங் கொள்ளாது, குழந்தையைத் தாங்கிச் செல்கிறார்! அந்தக் குழந்தையோ வெகு சுந்தரமானது! அதன் நிறம் நீல நிறமாயினும், ஒளியோ மெத்தவும் சுத்தமாய் விளங்கிற்று! அதனுடன் ஆகாயத்திற்குப் போட்டி போட முடியாது மேகமாகிற போர்வையைப் போட்டுக்கொண்டது! அப்பொழுதே இருந்து இருந்து கையையும் காலையும் அசக்குவதாலும் ஆட்டுவதாலும், மெய்யாக அக்குழந்தை செய்யாத துடுக்குகள் செய்யு மென்பது நன்றாய் விளங்கிற்று! அது சிறிது அயர்ந்து கண்ணை மூடிக் கொண்டிருந்ததாயினும், நல்ல தூக்கமில்லை யென்று சொல்லலாகும்! ஆயினும் அப்பெரியவர் அருமைக் குழந்தையை அங்கையிற் றாங்கிச் சென்று கொண் டிருக்கிறார்! இரவு முற்றிக் கொண்டே வர, இருளும் மிகுத்துக் கொண்டே வந்தது! உள்ள தொந்தரை போதாதென்று, ஊருக் கருகிலுள்ள ஆறு ஒன்றிலும் பூரணப் பிரவாகம் கோரமாய்ப் போய்க்கொண்டிருந்தது! இதை யெண்ணி அதிகம் வருந்தின ராயினும், ஓயாத அவர் நடை வேகம் சாயவில்லை! ⁕ ⁕ என்ன ஆச்சர்யம்! ஐயன் செல்வதற்கு ஆறும் வழி விட்டது! அவ்வழியாகவே போய், ஆயர்பாடி யடைந்தார்! எசோதையின் பிரசவக் கிரஹத்திற் பிரவேசித்து இக்குழந்தையை ஆங்கே வைத்தனர்; யார்க்கும் தெரியாது திரும்பினர்.

## இந்த சந்திரப் பிரகாச சுந்தர வடிவினனே,

## ஸ்ரீ கிருஷ்ணன்!

⁕⁕⁕

ஓடுவார் விழுவா ருகந்தா லிப்பார்
நாடுவார் நம்பிரா னெங்குற்றா னென்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்டநின்று
ஆடுவார்களு மாயிற் றாய்ப்பாடியே.

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம்புகுவார் புக்குப் போதுவார்
ஆணொப்பா ரிவன் நேரில்லைகாண் திரு
வோணத்தா னுலகாளு மென்பார்களே.

உறியை முற்றத் துருட்டிநின் றாடுவார்
நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்
செறிமென் கூந்த லவிழத் திளைத்தெங்கும்
அறிவழிந்தன ராய்ப்பாடி யாயரே.

# விநோதக் கொத்து

**பரிசாரகையின் விருந்து :—**

**விருந்தாளி** :—ஏன் உங்கள் வீட்டில் யாருமில்லையா? பரிசாரகியைக் கொண்டு பரிமாறச் செய்கிறீர்களே?

**வீட்டாளி** :—தாயார் வெளியே போயிருக்கிறார். மனைவி பூ பின்னல் போட்டுக்கொண் டிருக்கிறாள். அதனால் தான்.

**விருந்தாளி** :— ஆனால் இது உங்கள் விருந்தல்லவோ? பரிசாரகியின் விருந்தோ!

***

**எது பெரிது :—**

**சாஸ்திரி** :—சிவன் பெரிதா, விஷ்ணு பெரிதா?

**வேதாந்தி** :—எது பெரிது என்பது அப்படியிருக்கட்டும். நமது மனம் பக்தியின் வலையிற் படுகிறதா என்ற கேள்வியே யாவற்றினும் பெரிது.

***

**சென்னை மூர்மார்க்கட் :—**

**வாங்குபவன்** :—அந்த சாமான் விலையென்ன?

**வியாபாரி** :—ஒரே விலை, கறார் விலை, பதினாறு அணா.

**வாங்குவோன்** :—இரண்டணாவுக்குக் கொடுப்பீரா? நான் வெளியூரல்ல, உள்ளூர்தான்.

**வியாபாரி** :—என்ன பேராசைக்காரரய்யா நீர்? மூன்றரை அணா கொடுப்பீரா இல்லையா? ஒரே விலை!

***

**வீட்டுக்குப் போகாததேன் :—**

**வேணு** :—ஏது இவ்வூரிலேயே தங்கிவிட்டீர்கள்? உங்கள் வீட்டைப் பார்த்து ஒரு வருஷம் இருக்குமே.

**நாணு** :—ஆம். அங்கே போனால் சொட்டுச்சொல் கிளம்புகிறது. எத்தனை நாளைக்கு இப்படி வேலை வெட்டியின்றி இருப்பது? ஏதாவது வேலைக்குப் போகவேண்டாமா? என்று தொல்லைப்படுத்துகிறார்கள். பெரிய சங்கடமா யிருக்கிறது.

**வேணு** :—தங்கள் சம்சாரம், குழந்தைகள் எங்கே யிருக்கிறார்கள்? அவர்களுக்கு வழி எப்படி?

**நாணு** :—எல்லாரும் வீட்டில்தான்! நாலு நாள் பட்டினி கிடந்தால் வழி தானாகவே ஏற்பட்டுக் கொள்கிறது!

***

**மனஸ்தாபம், கலகம் :—**

**உபாத்தியாயர்** :—மனஸ்தாபம் கலகங்களால் என்ன பயன்?

**மாணுக்கன்** :—அவரவர்களின் உண்மைக்குணம் தெரிந்துபோவதுதான். விலகுகிறவர்களை விலக்கி, சேருகிற தன்மையுள்ளவர்களைச் சேர்த்துக் கொண்டு செலவையும் சுருக்குவதற்கு வழி ஏற்படும்.

***

**ஆங்கில ஸம்பிரதாயம் :—**

துரை :—*என் கண்ணே! என் காலம் முடிந்துவிட்டது. டாக்டர் நாளை வரை நான் இருப்பது நிச்சயமில்லையென்று சொல்லிவிட்டார். எதிர் வீட்டு 'ஆர்தர்' நல்ல குணசாலி. இன்னும் எனது நண்பருங்கூட. அவரையே எனக்குப் பின் தெரிந்தெடுத்துக்கொள்.*

துரைசானி :—*அதைப்பற்றித் தங்களுக்குக் கவலை ஏன்? நாங்கள் இருவரும் முன்பே பேசித் தீர்மானம் செய்துகொண்டுவிட்டோம்.*

***

**கண்ராவியான பதில் :—**

உபாத்தியாயர் :—*வீடு நிறைய, பீரோக்களிலும் பெட்டிகளிலும் காகிதக் கட்டுகள் இருக்கின்றன. என் பிராணனுக்குச் சமானமான அவை கள் எனக்குப் பின் என்ன கதியாகுமோ?*

படியா மனைவி :—*அந்தக் காகிதக் குப்பைகளை நீங்கள்தான் மெச்சிக் கொள்ளவேண்டும். எப்போது சக்கரைக்கடைக்கு அனுப்பிக் காலி செய்வதோ வென்றல்லவா காத்திருக்கிறேன்?*

***

**வேலையில்லாக் கஷ்டம் :—**

ஆங்கிலம் கற்ற வாலிபர் :—*ஐயா, என் விண்ணப்பத்தைக் கவனித் தீர்களா? ஒரு மாதமாகியும் அதற்கு விடை வராததால் நேரில் தங்கள் ஸமூகத்திற்கே வந்தேன். நான் பல துறையிலும் பயின்றவன். எந்த வேலையைக் கொடுத்தாலும் சிரத்தையுடன் பார்ப்பேன்.*

உத்தியோகஸ்தர் :—*அதற்குள் ஏன் வந்தீர்கள்? நீர் என்ன அப்படி அதிகம் படித்து வீசிவிட்டது? உம்மைக் காட்டிலும் உயர்தரக் கல்வி பெற் றோரெல்லாம் காத்துக் கிடக்கையில் உமக்கு ஏன் இவ்வளவு பதட் டம்? அதோ அந்த மூன்று கட்டையும் பார்த்தீரா? அவ்வளவும் வேலையற்ற பேர்வழிகளின் விண்ணப்பங்கள்தான்.*

ஆ. வாலிபர் :—*வயிற்றின் கொடுமைக்காக வந்து பிரார்த்திப்பதன்றி, வேறு அப்படி நான் ஏதும் தவறாக நடந்து கொள்ளவில்லை ஐயா.*

உத்தியோகஸ்தர் :—*கேட்டதற்கு மட்டும் பதில் சொல். வழவழ சமாசாரம் வேண்டாம்.* (Answer to the Point.)

ஆ. வாலிபர் :—*என் சொத்துக்கள் யாவும் படிப்புக்கே செலவாகி விட் டன. ஏதாவது எனக்கு ஒரு வேலை தந்து ஆதரித்தால் பெரும் புண்ணியம்.*

உத்தியோகஸ்தர் :—*நீ என்ன மனிதன்?* (What a man you are?) *உம்மை என்னிடம் வரும்படி யார் உள்ளே விட்டது? புண்ணியத் தைக் கோவிலில் போய் சொல்லிக்கொள்ளும்.*

ஆ. வாலிபர் :—*தாங்கள் என் பரிதாப நிலைக்கு இரங்க வேண்டுகிறேன். நீங்கள் மனம் வைத்தால் எப்படியும் வேலை கொடுக்கலாம். என் குடும்பம் தங்களை வாழ்த்தும்.*

உத்தியோகஸ்தர் :—சேவகா, அனுவசியமான தொல்லை தரும் இந்த மனிதனை வெளியே போகச்சொல். (You 'peon' ask him to go out.)

ஆ. வாலிபர் :—என் விண்ணப்பத்திற்கு என்ன முடிவு சொல்லுகிறீர்கள்? கொஞ்சம் இரக்கம் காட்டவேண்டும்.

உத்தியோகஸ்தர் :—வேலை எதுவும் காலியில்லை. வெளியே போ. அனுவசியமாகத் தொந்தரை செய்யாதே. பொழுதுவிடிந்தால் இந்த விண்ணப்பச் சனியன்களின் தொல்லையே எனக்குப் பெரியதா யிருக்கிறது. போம் போம்.

ஆ. வாலிபர் :—எவ்வளவோ நம்பிக்கையுடனும் வந்தேன். தாங்கள் கருணையை மறந்தீர்கள். அது என் துரதிர்ஷ்டம். தாங்களும் என்னைப்போல் ஒருகாலத்தில் இப்படி விண்ணப்பித்து வேலைக்குக் காத்துக் கொண்டிருந்தவர்தான். தங்களுக்கு உத்தியோகமாகிவிட்டது. அதனால் அந்தக் கஷ்டத்தை மறந்துவிட்டீர்கள்; எனக்கு இன்னும் வேலை கிடைக்காததால் அந்தக் கஷ்டத்தை யுணருகிறேன்—என்று கூறிக் கனவருத்தத்துடனும் தன் வீட்டிற்குத் திரும்பினார். ஜீவனத் தொல்லை இவ்வளவு பரிதாபதிசையி லிருக்கின்றது.

***

படுதா :—

ஒருவர் :—தவறாமல் மாலையில் வாரும், எங்கள் வீட்டிற்கு அடையாளம் வெளியில் கட்டியிருக்கும் படுதா.

மற்றவர் :—நண்பரே அவர் சொல்லுவது உமது மனதிற் படுதா?

***

இரவல் பத்திரிகை :—

சாமி :—எப்போது பார்த்தாலும் உமது கையில் பத்திரிகை இருக்கிறதே. நீர் தான் எந்தப் பத்திரிகைக்கும் ஒரு காசுகூட சந்தா கொடாதவராயிற்றே.?

போமி :—மாதிரிப் பத்திரிகையாகவே ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு விலாஸத்திற்குத் தருவித்துக் கொள்வது வழக்கம். அப்படி வராத பத்திரிகைகளுக்கு இரவல் கொடுக்க எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். இரவலுக்கா பஞ்சம்?

சாமி :—அப்படியானால் வெகு பொருட் செலவில் விவாகம் ஏன் செய்து கொண்டீர்? அதையும் எங்கேயாவது இரவலில் தேடிக் கொள்கிறது தானே?

***

" ஆநந்த குண போதினி "

அவர் :—நேயரே! " ஆநந்த குண போதினி " ப் பத்திரிகை எப்படி இருக்கிறது?

இவர் :—அது இரவல் வாங்கிப் படிக்கும் பத்திரிகையாகக் காணோம். பார்த்துவிட்டுக் கொடுத்துவிட முடியவில்லை. தனக்கென்றே சொந்தத்தில் ஒரு பத்திரிகை தருவித்துக் கொள்ளும்படியாக அவ்வளவு ஸ்வாரஸ்யமா யிருக்கிறது. தடவைக்கு 48-பக்கம், அல்லது ஒவ்வொரு மாதம் 56-பக்கமானால் ஒரு வருஷத்தில் 576-பக்கங்களும்

அதற்கு மேலுமுள்ள பெரிய புத்தகமாய் விடுகின்றதே. இதில் தபால் செலவு முதலியவற்றிற்கு 4-அணா நீக்கினால், 12-அணாவுக்கு இவ்வளவு பக்கமா? எவ்வளவு பெரிய லாபம்! இன்றைக்கே "ஆநந்த குண போதினி"க்கு ஒரு வருஷ சந்தாவை அனுப்பப்போகிறேன்.

***

**பிரசுர கர்த்தாவின் தந்திரம்:—**

**பத்மி:**—உன் வீட்டுக்காரர் வெளியிட்ட உதவாத புஸ்தகத்துக்கு வெகுவாக சிலாகித்துப் பத்திரிகையில் அபிப்பிராயம் வந்திருக்கிறதே. அதற்குத் தகுந்தபடி புஸ்தகம் காணோமே.

**சீதா:**—அந்தத் தந்திரம் தெரியாதா? உதவி ஆசிரியரின் கையில் கொஞ்சம் பணம் கொடுத்து நல்லவிதமாக எழுதும்படி செய்துவிட்டார். இரண்டு வரி எழுதப் படிப்பு இல்லாமற்போனாலும், இந்த ஸாமர்த்தியங்களில் என் பர்த்தா வெகு கெட்டிக்காரர்.

**பத்மி:**—புஸ்தகத்தில் அதை எழுதியவரின் பெயரைக் காணோமே.

**சீதா:**—என் பர்த்தாவே எழுதியதுபோல் அவர் பெயர்மட்டுமே பரவட்டுமென்று செய்த தந்திரம். பத்திரிகைகளிலும் எத்தனையோ அப்படிப் பத்திராசிரியரின் பெயரின்றி நடந்ததில்லையா? அதுபோலத் தான் இதுவும்!

***

**காசா—லேசா?:—**

**செட்டியார்:**—சரிதான், என்னமோ பாட்டு பாடிவிட்டுப் பணம் பணம் என்கிறீர். எத்தனையோ வித்வான்கள் பத்துரூபா சம்பளத்திற்கு வேலை செய்கிறார்கள். காசா—லேசா?

**வித்வான்:**—ஹே! பணப்பிசாசே நீ "காசாலே—சா"

***

**இ—(ஈ) ருசி தெரிய வந்தது:—**

**மாம்பழக் கவிச்சிங்கநாவலர்:**—கவிராயரே உமது பெயரென்ன?

**புதுவை இராமாநுஜக் கவிராயர்:**—என் பெயர் இராமாநுஜன்.

**மாம்பழக் கவி:**—ராமாநுஜன் என்பது சரிதான். "இ" என்பது அதன் முன் ஏன் வந்தது?

**இராமாநுஜக் கவி:**—இ (ஈ) மாம்பழத்தின் ருசி தெரிய வந்தது!

***

**தர்க்க சாஸ்திரம்:—**

**பண்டிதர்:**—நீ தர்க்க சாஸ்திரம் படித்திருக்கிறாயா? தமிழில் அதற்கு ஒரு சிறு நூல் இருக்கிறது. நூல் சிறிதாயினும் பண்டிதர்களுக்குக் கூட அதன் பொருள் விளங்காது. பிறரிடம் பாடங் கேட்டே தெரியவேண்டும். தெரிந்தபிறகோ அதனிலும் இனிப்பான நூல் வேறில்லை யென்று சொல்லும்படி இருக்கும்.

**மாணவன்:**—அவ்வளவு கஷ்டம் எதற்காக? இப்பொழுது பத்திரிகைகளுக்குள் நடக்கும் விவாதங்களைப் பார்த்தே தர்க்க சாஸ்திரம் நன்றாகக் கற்றுக்கொள்ளலாமே! அதிலும் ஓட் சமயத்தில் ஒருவர் மேல் ஒருவர் கண்டனங்கள் எழுதும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக இன்னும் சுலபமாய் தர்க்க சாஸ்திரத்தை அப்பியஸிக்கலாம்.

ஸ்திரீ கௌன்ஸிலர் :—

கணவன் :—என்ன அதற்குள் சிங்காரித்துக்கொண்டு தயாராய்விட்டாய்? குழந்தை தொட்டிலில் அழுகிறதே?

ஸ்திரீ கௌன்ஸிலர் :—இன்று காலை 7-மணிக்கே அவசரமான முனிஸிபல் மீட்டிங்கு. ஒன்பது மணிக்குள் வந்துவிடுகிறேன். அதுவரை தொட்டிலை ஆட்டிக்கொண்டு இருங்கள். நான் வந்ததும் நீங்கள் ஆபீஸுக்குப் போகலாம். வேலைக்காரி எல்லாம் பார்த்துக்கொள்வாள்.

* * *

நல்ல பெயர் :—

கோபு :—நல்ல பெயர் எப்படிப் பெற முடியும்?

பர்பு :—எதிலும் சம்பந்தப்பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி நிற்பவர்களுக்கு நல்ல பெயர். சம்பந்தப்பட்டுக் கொண்டாலோ உடனே குறைப் பேச்சு தொடங்கிக்கொள்ளும். இன்னும் சிலருக்கு அன்னம் இட்டால் இடுகிறவரை நல்ல பெயர். இடத்தவறினாலோ உடனே கெட்ட பெயர்! அதைவிட ஆறு அணா கையில் தந்து ஹோட்டலுக்குப் போகும்படி சொன்னால் வெகு நல்ல பெயர் கிடைக்கும். அந்த சாப்பாட்டின் விலை ஆறு அணா என்று அப்போது காசினுடைய அருமையும், புசிப்பினுடைய அருமையும் தெரியும். காசைச் செலவிட்டுப் பண்டங்கள் வாங்கிக் கொடுப்பதைவிட, காசையே கொடுத்து விட்டால் அதற்கு ஒரு தனிப் பெருமையும் நல்ல பெயருமுண்டு.

* * *

தொல்லை நீக்க :—

—“ஸதா நம்மைத் தொந்தரை செய்கிறவனை எப்படி விலக்குவது?”

—“அவனுக்கு இரண்டுரூபா கடன் கொடுத்துவிடு. அது திரும்பி வராதானதால் உன்னைக் கண்டாலும் அவன் பதுங்குவான்; அதோடு அவன் தொல்லை ஒழிந்த மாதிரிதான்.

* * *

பத்திரிகை படிப்பதின் நோக்கம் :—

வாசகசாலையின் அதிபர் :—ஏது ஒவ்வொரு நாளும் தவறாமல் வந்து வெகு ஊக்கத்துடன் எல்லாப் பத்திரிகைகளையும் பார்க்கிறாயே?

பி. ஏ. படித்த வாலிபன் :—எந்தப் பத்திரிகையிலாவது “தேவை” (Wanted) என்ற விளம்பரம் இருக்கிறதாவென்று ஆராய்வதற்காகத் தான் அவ்வளவு சுறுசுறுப்பாய்ப் பார்க்கிறேன்.

* * *

என் வேலையை நீங்கள் செய்து பாருங்கள் :—

முனிசிபல் இன்ஸ்பெக்டர் :—நீ செய்கிற மகா வேலைக்கு இந்தச் சம்பளம் போதாதோ? என்னடா நீ மாத்திரம் அதிக வேலை செய்கிறது? எல்லோரும் செய்கிறதுபோல்தான் நீயும் செய்கிறாய்.

முனிசிபல் தோட்டி :—இல்லை, எஜமானே! என் வேலை அதிகம். அமாவாசைச் சோறு பிச்சை எடுத்தும் வயிற்றுக்குக் கட்டவில்லை. உங்கள் வேலை காலியானால் அதற்குப் பதில் பார்க்கவேண்டியவர்கள் உடனே கிடைப்பார்கள். என் வேலைக்கு என் ஜாதியார்தான் வரவேண்டும். “என் வேலையை நீங்கள் செய்து பாருங்கள்.” அப்போது அதிலிருக்கிற கஷ்டம் உங்களுக்கே தெரியும்.

# பத்திரிகா சாரம்

## தனித் தமிழ்ப் பைத்தியம் :—

தமிழ்மொழியோடு சம்ஸ்கிருத பதங்களையும் விரவிப் பிரயோகித்தல் தொன்று தொட்டுள்ள ஆட்சியாகும். பண்டைக்காலத்துப் புலவர்களும் மற்றும் நூலாசிரியர்களும் தாம்செய்த நூல்களில் வடமொழியைத் தம் மொழியோடு கலந்து தமிழ் நூல்கள் செய்திருக்கின்றார்களென்பதனை அந்நூல்களைப் படிப்பாரெவரும் நன்கு விளங்கிக்கொள்வர். பிற்காலத்துச் செய்யப்பட்ட தமிழ் வசன நூல்களிலும் சம்ஸ்கிருதச் சொற்கள் எடுத்து ஆளப்பட்டுள்ளன. தமிழகத்தார் சம்பாஷிக்கும்போதும் அச்சம்பாஷணையில் சம்ஸ்கிருத பதங்கள் விரவி வருகின்றன. சம்ஸ்கிருத பதங்களைத் தமிழில் உபயோகிக்கும் முறையை நன்கு எடுத்து விளக்கும்பொருட்டு, பிரயோக விவேகம் முதலிய இலக்கண நூல்களுஞ் செய்யப்பட்டுள்ளன.

திருக்குறள் முதலிய நீதிநூல்களிலும், இராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களிலும் கந்தபுராணம் பெரியபுராணம் முதலிய புராணங்களிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் தேவாரம் திருவாசகம் முதலாம் அருட்பாக்களிலும் திராவிட மாபாஷியம் முதலாம் வசன நூல்களிலும், பிற்காலத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வித்துவான் தண்டவராய முதலியார், ஸ்ரீமத் சபாபதி நாவலர் முதலியோர் செய்த வசன நூல்களிலும், இக்காலத்து வெளிவரும் தமிழ் நூல் எவற்றினும் வடமொழிப் பிரயோகம் மலிந்து விளங்குகின்றது.

இங்ஙன மெல்லாமிருப்ப, தென்னிந்தியாவிலே நவீன கொள்கையுடைய ஒரு சாரார் தனித் தமிழ் மொழியையே உபயோகித்தல் வேண்டும்; வடமொழியின் மணமும் ஆகாதென்று சாதிக்கின்றார்கள். தனித் தமிழ் மொழியிற் சில நூல்களைத் தாம் நவீனமாகச் செய்யத் தொடங்கிச் சொற்சுவை பொருட்சுவை செவிக்கினிமை இலகுவில் விளங்கவைத்தல் முதலியனவின்றி இடர்ப்படுகின்றார்கள். சம்ஸ்கிருத பதங்கள் விரவிச் செய்யப்பட்ட பழைய நூல்களை யெல்லாம் வெறுத்தொதுக்கிவிட்டார்கள்; வேதாகமங்களைத் தள்ளிவிட்டுத் தமிழிலே வேதாகமங்கள் இருந்தன வென்றும் அவைகளைக் கடல் கொண்டுபோய்விட்டன வென்றுஞ் சொல்லுகின்றார்கள். சமணாசிரியர்களாலும் பௌத்த ஆசிரியர்களாலும் இயற்றப் பெற்ற சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களே சம்ஸ்கிருத பதம் அதிகம் விரவாதன வென்று கூறி அவைகளையே பாராட்டி வருகின்றார்கள். வடமொழிப் பிரயோகஞ் செய்தனவென்று தோஷஞ் சுமத்தி, இந்த நவீனகொள்கையுடைய சித்தாந்த சாத்திரங்களைச் செய்த சந்தான குரவர்களையும் தமிழ் வேதங்களைப் பாடிய சமயாசாரியர்களையும் புராணேதிகாசங்களைச் செய்த கச்சியப்பர், கம்பர் முதலாம் பெரும் புலவர்களையும் அருட்பாக்களைச் செய்த பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர் முதலாம் மகா ஞானிகளையும் உபேட்சிக்கின்றார்கள். மந்திரங்களை வெறுக்கின்றார்கள்; பஞ்சாக்கரத்தை உச்சரிக்கக் கூசுகின்றார்கள்; இன்னும் இவர்கள் சிலர் இக்காலத்திற் செய்துவரும் அற்புதங்கள் பல.

[இந்துசாதனம்]

## II

## சுதேச சமஸ்தான வாசிகளைப்பற்றி :—

"சுதேசமித்திர"னில் "பிரிஷ்டிஷ் இந்தியாவும் சுதேச சமஸ்தானங்களும்" என்ற தலைப்பின் கண் சீதாநாதன் என்பவர் எழுதியுள்ள அரிய வியாசத்திலிருந்து சில குறிப்புகளை இங்கு தருகிறோம் :—

ஒவ்வொரு பிராந்தியமும், அது இருந்துவரும் இயற்கை நிலைமைக் கேற்றவாறு, அதன் வளங்களும், சீதோஷ்ண நிலைமையும், வித்தியாசப் பட்டிருப்பதுபோல், ஆங்காங்கு அமைந்திருக்கும் அரசியலுக்கு ஏற்றவாறு, பிரஜைகளின் மனப்போக்கும், திருஷ்டிகளும், வித்தியாசமடைகின்றன வென ஒரு பிரஞ்சு மேதாவி கூறியிருக்கின்றார்.

***

* * * இதந் தருவதுபோன்று காணப்படும் அந்நிய ஆட்சியைவிட இடர் தருவதுபோன்று காணப்படும் சுஜாதீய ஆட்சியே மேலென்று அவர்கள் (அதாவது எல்லைப்புறத்திலுள்ள அப்ரிதி ஜாதியினர்) கருதுகிறார்கள். அதாவது பட்டுக்கயிறு போன்ற நைஸான சட்ட திட்டங்களால் கட்டுப் பட்டு அமைதியான அடிமை வாழ்வு வாழ்வதைவிட, கந்தலைக் கட்டிக் கொண்டு கரடுமுரடான தரைகளில் திரிய நேரிட்டிருப்பினும் தம் ஜாதியைச் சேர்ந்தவர்களால், தாங்கள் ஆளப்பட்டு வருவதில், அதிக சுதந்திரமும், சுகமும் தங்களுக்கு இருப்பதாய் அவர்கள் உணர்கிறார்கள். இது இயற்கை. * * *

***

* * * ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற வித்தியாசம் பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரு வழிப்போக்கனுக்கும் தெற்றெனப் புலப்படக் கூடிய விதத்தில் காணப்படுகின்றது. சுதேச சமஸ்தானங்களில் அது இல்லை. * *

***

சுதேச சமஸ்தானங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யும் ஒவ்வொருவரும், ஒரு விஷயத்தில், பிரிட்டிஷ் இந்தியர்களுக்கும், சமஸ்தான பிரஜைக்கும் வித்யாசமிருக்கக் காண்பர். அதென்னவென்றால், பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஜனங்கள், தாங்கள் ஆங்கிலேயருக்கு அடிமைகளாய் விட்டதாய் உணர்கிறார்கள். சமஸ்தான வாசிகளோ, தங்களை ஏழைப் பிரஜைகளாக மட்டும் கருதி நடந்துகொள்ளும் மனப்பான்மை யுடையவர்களா யிருக்கின்றார்கள். தங்களுடைய அடிமைத்தனத்தைக் கண்டு வெட்கமும் ஆத்திரமும் அடைந்தவர்களாய், அதனைப் போக்கிக்கொள்ள பிரிட்டிஷ் இந்தியர் ஆகரகம் கொண்டவர்களாயிருக்கின்றார்கள். அந்த உணர்ச்சி சமஸ்தானப் பிரஜைகளிடம் இன்னும் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவிலும், சுதேச சமஸ்தானங்களிலும் வீசும் ராஜீயக் காற்றில் காணப்படும் முக்கிய வித்தியாசம் இதுதான்.

---